பக்கங்கள் : பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 04 வியாழக்கிழமை (20.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 234

## உடுவிலில் நேற்று கிளைமோர்த் தாக்குதல் மூன்று படையினர் பலி; 14பேர் படுகாயம்!

### பதிலுக்கு இராணுவம் சுட்டதில் பொதுமக்கள் மூவரும் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மருதனார்மடம் சந்தியில் இருந்து 250 மீற்றர் தூரத்தில், மானிப்பாய் - உடுவில் வீதியில் படையினர் பயணம் செய்த பஸ் ஒன்று நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கிளைமோரில் சிக்கியது. இதில் கப்டன் தர அதிகாரி ஒருவர் உட்பட மூன்று படையினர் உயிரிழந்தனர். 14 பேர் படுகாயமடைந்தனர்.

உடுவிலிருந்து மருதனார்மடம் சந்தியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரின் பஸ்ஸே கிளைமோரில் சிக்கியது. ஐம்பது யார் தூரத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட பஸ் மதிலுடன் மோதி பின்னர் குடைசாய்ந்தது.

மருதனார்மடம் சந்திக்கும் உடுவில் மகளிர் கல்லூரிக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதியோரமாக நின்ற மரம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடித்தது என்று கூறப்பட்டது.

அந்த பஸ்ஸிலிருந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கடத்தப்பட்ட இருவர் நேற்றுக் காலை சடலங்களாக மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்பில் கடந்த 16 ஆம் திகதி இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட இரு இளம் குடும்பஸ்தர்கள் நேற்றுக் காலை மட்டு. பாலமீன்மடு, பார் வீதியில், வெளிச்ச வீட்டுக்குச் சமீபமாக சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டிருக்கின்றனர்.

சத்துருக்கொண்டான் கொலனியைச் சேர்ந்தவர்களான சற்குணசிங்கம் சுதாகரன் (வயது-23), முருகேசு சிவகுமார் (வயது-24) ஆகியோரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர்.

# வடக்கு - கிழக்கைப் பிரித்தால் அது யுத்தப் பிரகடனமாகவே கருதப்படும்!

## சபையில் சிவாஜிலிங்கம் எம்.பி. கடுந்தொனியில் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 20

ஒருவகையான் யுத்தத்தை முன்னெடுத்து வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிட அரசு கங்கணம் கட்டிக்கொண்டு முயற்சிக்கிறது. அவ்வாறு வடக்கையும் கிழக்கையும் பிரித்தால் அதனை தங்கள் மீதான யுத்தப் பிரகடனமாகவே தமிழர்கள் கருதுவர்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று கடுந்தொனியில் எச்சரிக்கை விடுத்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம்.

நாடாளுமன்றத்தில் நேற்று வடக்கு - கிழக்கு நிலைவரம் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணையை வழி மொழிந்து உரையாற்றுகையிலேயே சிவாஜிலிங்கம் இப்படி எச்சரித்தார்.

அவர் தனது உரையில் கூறியதாவது:-

"தமிழ் மக்கள் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளனர். நாம் பேச்சுக்குத் தயார். புலிகள்தான் யுத்தத்தைத் தொடங்குகின்றனர் என அரசு கூறிக்கொண்டு யுத்தத்தைத் தொடங்கிவிட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்தியுடன் விசேட பிரதிநிதி நாளை கிளிநொச்சிக்கு!

கொழும்பு, ஜூலை 20

ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்தியுடன் அதன் விசேட பிரதிநிதியான சுவீடனைச் சேர்ந்த அன்ட்ரஸ் ஒஜேலண்ட் நாளை கிளிநொச்சிக்குச் செல்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்ததை அடுத்து போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் பணிகள் நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட பிரதிநிதி கிளிநொச்சிக்குச் செல்கிறார்.

இலங்கைப்போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகளை வெளியேறுமாறு புலிகள் (14ஆம் பக்கம் பார்க்க)

## மோ. சைக்கிளில் வந்து துப்பாக்கிச் சூடு! கோப்பாயில் மூன்று இளைஞர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை20

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு முன்பாக நேற்றுமாலை 5.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில்வந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று இளைஞர்கள் காயமடைந்தனர்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த குணசேகரம் மதீஸ்வரன் (வயது 21), டச்சுவீதியைச் சேர்ந்த நவரத்தினம் டினேஸ் (வயது 23), நீர்வேலி தெற்கைச் சேர்ந்த இராசரத்தினம் பார்த்தீபன் (வயது 30) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

கலாசாலைக்கு அருகில் உள்ள மைதானத்தில் விளையாடிவிட்டு வீதியில் மூவரும் கதைத்துக்கொண்டு நின்றனர் என்றும் - அப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் போராளி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 20

திருகோணமலையின் ஈச்சிலம்பற்றுப் பகுதியில் முன்னரங்கக் காவலரண் அருகில் நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையைச் சேர்ந்த லெப்ரினன்ட் குயிலன் (தேவானந்தன் வினோத்) என்ற போராளியே சாவடைந்தார்.

(ஐ - 12)

## நிதிச் சட்ட மூலங்கள் மீள சபையில் சமர்ப்பிப்பு தோற்றால் உடன் நாடாளுமன்றம் கலைப்பு!

கொழும்பு, ஜூலை 20

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அரசுத் தரப்பினால் சமர்ப்பிக்கப்பட்டு, ஜே.வி.பி. எதிர்ப்புக் காரணமாக நிறைவேற்ற முடியாமல் நிலுவையில் விடப்பட்ட நான்கு நிதிச் சட்டமூலங்களையும் அடுத்த வாரமளவில் மீண்டும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வைக்க ஜனாதிபதி முடிவு செய்திருக்கின்றார்.

அப்போது அவை நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டால், அதனடிப்படையில் நாடாளுமன்றைக் கலைத்து புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுவது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கின்றார்.

இதனை அவரே தமக்கு மிக நெருக்கமானவர்களிடம் நேற்றுத் தெரிவித்தார் என நம்பகரமாக அறிய வந்தது.

"ஜே.வி.பியினர் நினைத்தபடி அரசை நடத்த முடியாது என ஜனாதிபதி கருதுகின்றார். ஜே.வி.பியின் எதிர்ப்பால் நான்கு நிதிச் சட்டமூலங்களை நிறைவேற்ற முடியாது போயிருக்கின்றமை குறித்து ஜனாதிபதி பெரும் சீற்றம் அடைந்திருக்கின்றார். அரசின் செயற்பாட்டை ஜே.வி.பி அரசியல் ரீதியாகப் பணயம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளை கைவிடுவது என்ற முடிவுக்குக் கண்டனம்

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் காணாமற்போனோர் தொடர்பான இரண்டாயிரம் பேரின் முறைப்பாடுகளை கைவிடுவது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்த தீர்மானத்தை ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கண்டித்திருக்கின்றது.

இது தொடர்பாக ஆசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சர்வதேச அளவில் காணாமற்போதல் சம்பவங்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணையத்தின் இத்தகைய பகிரங்க அறிவிப்பு ஆச்சரியமளிக்கின்றது.

காணாமற்போவோர் தொடர்பான விசாரணைகளைத் தொடரும் நிலையில் நட்டஈடு உட்பட ஏனைய விடயங்களுக்கு ஆணைக்குழு முகம்கொடுக்க வேண்டும் என்பதற்காக விசாரணைகளை நிறுத்துவதாக ஆணைக்குழு

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தமிழகத்தினுள் அனுமதிக்காதீர்!

### மன்மோகனிடம் வைகோ கோரிக்கை

புதுடில்லி, ஜூலை20

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தமிழ்நாட்டினுள் அனுமதிக்கக் கூடாது என்று இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ம.தி.மு.க வின் பொதுச்செயலாளர் வைகோ இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். நேற்றுக் காலை இந்திய பிரதமரை அவர் இல்லத்தில் சந்தித்த வைகோ நேரில் இந்த வேண்டுகோளை விடுத்தார். தமிழ் நாட்டில் தேடப்படுகின்ற குற்றவாளியாக டக்ளஸ் தேவானந்தா அறிவிக்கப்பட்டுள்ளார் என்று அவர் இந்திய பிரதமரிடம் சுட்டிக்காட்டினார் என தெரிவிக்கப்பட்டது.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் மக்களிடமிருந்து புலிகளை பிரிப்பதே அரசின் கபடத்திட்டம்!

## நாடாளுமன்றில் சம்பந்தன் எம்.பி குற்றச்சாட்டு

"தமிழ் மக்களிடமிருந்து விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்துவதே அரசின் கபட நோக்கம். இதற்காகவே அரச படைகளும், ஒட்டுக்குழுக்களும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன."

- இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், வடக்கு - கிழக்கு ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

இந்த நாட்டின் தமிழர் பிரச்சினை, கடந்த 50 ஆண்டு காலமாகத் தீர்க்கப்படாமலிருக்கின்றது. சிலர் தமிழர் பிரச்சினை இரண்டு தசாப்த காலமாகத் தீர்க்கப்படாமலிருப்பதாகக் கூறுகின்றனர். அது சரிய யல்ல. ஆயுதப் போராட்டமே இரு தசாப்தகாலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை முறையாகக் கடைப்பிடிக்காமல் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. இங்கு சிலர் புலிகளை யுத்த ரீதியில் ஒழித்துக்கட்ட நினைக்கின்றனர். இதனால், சமாதான முன்னெடுப்புகள் தடைப்படுகின்றன. இவர்களின் மனநிலை மாறவேண்டும். சர்வதேச சமூகத்தின் கண்காணிப்புடனேயே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

ஐரோப்பிய ஒன்றியம் புலிகளைத் தடை செய்துள்ளது. இதேநேரம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறும் வன்முறைகள், கொலைகளையும் அரசு நிறுத்த வேண்டுமெனவும் கேட்டுள்ளது.

புலிகள் மாத்திரம் வன்முறையில் ஈடுபடவில்லை. அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளிலும் பல தரப்புகள் வன்முறைகளில் ஈடுபடுகின்றன. அதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

ஐ.நா. சபை, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்களிப்பு இனப்பிரச்சினை தீர்வுக்கு முக்கியமென இணைத் தலைமை நாடுகள் தெரிவிக்கின்றன.

ஜெனீவா பேச்சுகளின்போது அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவோம் என அரசு உறுதியளித்தது. இருந்தும் மூன்று மாத காலம் உருண்டோடியும் அரசு தனது உறுதிமொழியை நிறைவேற்றவில்லை.

நோர்வே மற்றும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் பணிகளை நாம் பாராட்டுகின்றோம். இருந்தும் சிலர் இவர்கள் குறித்துக் குறை கூறுகின்றனர்.

அமெரிக்காவின் ஆசிய விவகாரங்களுக்கான செயலாளர் ரிச்சர்ட் பவுச்சர் தமிழர்கள் தாங்கள் வாழும் பாரம்பரிய பிரதேசங்களை ஆளத் தகுதியுள்ளவர்கள் என சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண், இல்லாவிட்டால் நிலைமை விபரீதமாகுமெனவும் இலங்கை விஜயத்தின் பின்னர் கூறியிருக் கிறார்.

இலங்கை அபிவிருத்தியடைந்து முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டுமானால் இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். அரச பயங்கரவாதம் தமிழ் மக்களை நசுக்கி, அடக்கி ஒடுக்கப்பயன்படுத்தப்படுகின்றது. தமிழ் மக்களை இலங்கை ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து மீட்டெடுக்கவே ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் பேச்சுகள் நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்றே சர்வதேச சமூகம் தெரிவிக்கின்றது. இலங்கை அரசு நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கின்றது.

அரச படைகளுடன் ஒட்டுக்குழுக்களும் இணைந்து தந்திரோபாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகின்றனர். புலிகளைத் தனிப்படுத்துவதே அரசாங்கத்தின் ஒரே நோக்கமாகவுள்ளது.

அரசு நேர்மையாக நடந்து கொள்ளவேண்டுமென்பதைப் புலிகள் கோரிக்கை விடுக்கின்றனர். அரசு நேர்மையாகச் செயற்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. இந்த அரசியலமைப்பு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. இது குறித்து சர்வதேச சமூகத்துக்குத் நாம் தெளிவாகத் தெரிவித்துள்ளோம்.

மீண்டும் யுத்தம் ஆரம்பிப்பதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. ஏன் முஸ்லிம், சிங்கள மக்களும் கூட யுத்தத்தை விரும்பவில்லை.

கெப்பட்டிக்கொல்லாவையில் இடம் பெயர்ந்த சிங்கள குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகளை அலரிமாளிகைக்கு அழைத்து நிவாரணம் வழங்கி அவர்களுடன் அலவளாவுவதை தொலைக்காட்சியில் பார்த்தோம். ஆனால், எமது பிள்ளைகளின் நிலை என்ன? இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு முறையான நிவாரணம் வழங்கப்படவில்லை. மூதூரில் இடம்பெயர்ந்தவர்களுக்கு ஒரு வாரகாலத்துக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அதில் சீனியும் எண்ணையும் மாத்திரமே பாவிக்கக்கூடியதாக இருந்தன. ஏனைய பொருட்கள் அனைத்தும் பழுதான, பாவனைக்கு உதவாதவையே.

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களின் பின்னரே திருகோணமலைப் பகுதியில் இன ஒடுக்குமுறை இடம்பெறுகின்றது. திருகோணமலை அரச அதிபர் ஒரு இராணுவ அதிகாரி. அவர் நடத்தும் கூட்டங்களிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர். திருகோணமலை மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்ற எனக்கும் துரைரட்ணசிங்கம் எம்.பிக்கும் அழைப்பு அனுப்பப்படவில்லை. எனவே, இனவாதத்துடன் செயற்படும் அரச பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும் - என்றார் சம்பந்தன் எம்.பி. (எ-க)

# கோழும்புத்துறையில் வீடு புகுந்து தாக்குதல்; சந்தேகத்தில் மூவர் கைதாகி விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், ஜூலை 20

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து அங்கிருந்தோரைத் தாக்கியமை மற்றும் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பாக மூவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 31ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதவான் ஆர்.ரி விக்கினராஜா உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்புத்துறைப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதனையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலீஸார் சந்தேகத்தின் பேரில் கொழும்புத்துறைச் சேர்ந்த மயில்வாகனம் குணசேகரன், செல்வம் விமலதாஸ், மயில்வாகனம் ஞானச்சந்திரன் ஆகிய மூவரையும் கைது செய்தனர்.

இந்த மூவர் மீதும், பகல்நேரத்தில் அத்துமீறி வீட்டினுள் நுழைந்து கதவுகள், யன்னல்களை அடித்து உடைத்தமை, வீட்டில் இருந்தோரை அடித்துக் பயமுறுத்தியமை, ஒரு லட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளைக் களவாடிச் சென்றமை, 2லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளுக்குச் சேதம் விளைவித்து நஷ்டம் ஏற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

இந்த மூவரும் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 31ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், இவர்களிடமிருந்து கைப்பற்றிப்பட்ட மோட்டார் சைக்கிளை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.(எ-8)

# நாகர்கோயில் முன்னரங்க காவலரணில் மாணவர்கள் போராளிகளைச் சந்தித்தனர்

## யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ். குடாநாட்டின் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்று நேற்று நாகர்கோயில் முன்னரங்கப் பகுதிக்குச் சென்று போராளிகளைச் சந்தித்ததுடன், உலர் உணவுப் பொருள்களையும் வழங்கியது என்று யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி ஒன்றியம் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில்:-

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாகர்கோயிலுக்குச் சென்ற மேற்படி மாணவர்குழு, குடாநாட்டில் படையினர் ஏற்படுத்தி வரும் நெருக்கடிகள் குறித்து போராளிகளுக்கு எடுத்துக் கூறியது. அத்துடன் குடாநாட்டை விரைவில் மீட்க வேண்டும் என்றும் -

அதற்குத் தம்மால்இயன்ற பங்களிப்பை வழங்குவதாகவும் தெரிவித்தது.

மேற்படி மாணவர்களைச் சந்தித்த நாகர்கோயில் கட்டளைத் தளபதி அமிதாப், சமகால அரசியல் நிலை குறித்து எடுத்துக் கூறியதுடன், குடாநாட்டை விரைவில் மீட்டெடுப்போம் - என்றும் தெரிவித்தார் என மாணவர் ஒன்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றாம்பிட்டி கிராமத்தில் இன்று மருத்துவ முகாம்

கிளிநொச்சி,ஜூலை20

தமிழீழ சுகாதார சேவையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச மருத்துவ முகாம் இன்று வியாழக்கிழமை மூன்றாம்பிட்டி கிராமத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பொதுமருத்துவம், சுதேசமருத்துவம், கண் பரிசோதனை, பற்சிகிச்சை மற்றும் நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வு கூடப் பரிசோதனை என்பன நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-352).

# இருட்டுமடு பாடசாலையில் நிறுவிய கட்டடம் நேற்று வைபவரீதியாகத் திறந்துவைப்பு

புதுக்குடியிருப்பு, ஜூலை 20

உடையார்கட்டு இருட்டுமடு தமிழ்வித்தியாலயத்தில் கப்டன் லாலா றஞ்சன் நினைவாக தமிழீழ விடுதலைப்புலிகளினால் அமைக்கப்பட்ட கட்டடத்தின் திறப்புவிழாவும், கையளிப்பு நிகழ்வும் நேற்று சிறப்புற நடைபெற்றன.

நிகழ்வில், பொதுச்சுடரினை உடையார்கட்டு பிரதேசப் பொறுப்பாளர் இ.புகழரசனும், தமிழீழ தேசியக் கொடியினை புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் ந.தமிழன்பனும் ஏற்றினர்.

பெயர்பலகையினை முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.உ.முனீஸ்வரன் திரை நீக்கம் செய்தார்.

புதிய கட்டடத்தினை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

கப்டன் லாலா றஞ்சனின் திருவுருவப் படத்திற்கு மாவீரனின் தாயாரான திருமதி.லட்சுமி அம்மா ஈகைச்சுடர் ஏற்றி வைத்தார். மலர் மாலையினை புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜீ.எஸ்.பரமேஸ்வரன் அணிவித்தார்.

தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ. தமிழேந்தி, வித்தியாலய அதிபர் செ.கலாதேவனிடம் கட்டடத்திற்கான ஆவணத்தைக் கையளித்தார். அதனைத் தொடர்ந்து அதிபரின் தலைமையுரை இடம்பெற்றது. கருத்துரைகளை நிதித்துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி, முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினம், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட மூன்றாவது பாடசாலைக் கட்டடம் இது என்பதும், முல்லைத் தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட முதலாவது பாடசாலைக் கட்டடம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.(எ-359)

# யாழ். அமைதியின்மை குறித்த விசாரணை அறிக்கை விரைவில்

கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நிலவிய அமைதியின்மை குறித்து விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணைக் குழு, தனது விசாரணைகளைப் பூர்த்திசெய்து விட்டதாக அறியப்படுகிறது.

இளைப்பாறிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.ஜெயவிக்கிரம தலைமையிலான விசாரணைக்குழு 20 பேரிடமிருந்து சாட்சியங்களைப் பதிவுசெய்ததாகச் சொல்லப்படுகிறது. சாட்சியமளித்தவர்களில் பொதுமகன், பொலீஸ் அலுவலர்கள், பாதுகாப்புப் படை அலுவலர்கள் அடங்குவர். அவர்களின் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு விரிவான அறிக்கை விரைவில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரியவருகிறது.

# வடமராட்சி வலயப் பாடசாலைகளில் காலை உணவுத்திட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம,ஜூலை20

வடமராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த சில பாடசாலைகளில் மாணவர்களுக்கான காலை உணவுத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு அரிசி, பருப்பு, சத்துணவு மா போன்றவை இந்த வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்டன. அவற்றைக் கொண்டு முதலாம் தவணையின் போது மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இரண்டாம் தவணைக்கான உலர்உணவுப் பொருள்கள் இன்னமும் வழங்கப்படவில்லை. முதலாம் தவணைக்கு வழங்கப்பட்டு எஞ்சிய உலர் உணவுப் பொருள்களும் இப்போது பழுதடைந்து விட்டன.

சில பாடசாலைகளில் உலர் உணவுப் பொருள்கள் பழுதடைந்துள்ளதைக் கண்டுபிடித்த சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் அவற்றைப் பயன்படுத்த தடைவிதித்துள்ளனர். புதிய உலர்உணவுப் பொருள்களும் இன்னமும் வழங்கப்படவில்லை. இதனாலேயே சில பாடசாலைகளில் காலை உணவு வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இரண்டாம் தவணைக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன என்றும் -

ஆனாலும், இதுவரை அவை விநியோகிக்கப்படவில்லை எனவும்-கூறப்படுகிறது.(117)


உங்கள் விமானப் பயணத்திற்கு

Aero Lanka

In Domestic Operation

Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626

Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519

New way of Flying



Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600

Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979

யாழ் - கொழும்பு விமான சேவை

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## சொத்துப் பறிப்புச் செயற்பாடு மற்றொரு உரிமை மறுப்பு முயற்சி

பத்து வருடங்களுக்கு மேலாக வங்கிகளுடன் தொடர்புகளைப் பேணாத - அல்லது செயற்படுத்தப்படாத - வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்களைக் கைவிடப்பட்ட சொத்துக்களாகக் கருதும் ஒரு சட்ட விதியை முழு அளவில் நடைமுறைப்படுத்த முஸ்தீபுகள் செய்யப்படுகின்றன.

இவ்வாறு கைவிடப்பட்டதாகக் கருதப்படும் சொத்துக்களின் விவரங்களை சம்பந்தப்பட்ட வர்த்தக வங்கிகள், மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கும். அதன் பின் மத்திய வங்கி அந்தச் சொத்துக்களைத் தன்வசப்படுத்திக் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நடவடிக்கை மூலம் சுமார் மூவாயிரம் கோடி ரூபாவைத் திரட்டுவதற்கு - 'சுருட்டு'வதற்கு - அரசு திட்டமிட்டிருப்பதாகப் பூர்வாங்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக இயக்கப்படாத வங்கிக் கணக்குகள், வங்கியுடன் தொடர்புபட்ட சொத்துக்கள் குறித்து வர்த்தக வங்கிகள் தனியான படிவம் மூலம் மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டும் என்பது பொதுவான வங்கிச் சட்ட ஏற்பாடாகும். எனினும், அது பற்றிய விவர சேகரிப்பு ஏதும் கடந்த காலத்தில் இடம்பெறவேயில்லை.

தற்போது முதல் தடவையாக சம்பந்தப்பட்ட படிவங்கள், வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியால் அனுப்பப்பட்டுள்ளன. விவரத்தைச் சமர்ப்பிக்கும்படி வர்த்தக வங்கிகள் கோரப்பட்டுள்ளன.

இந்த விவர சேகரிப்பின் பின்னால் உள்ள சூட்சுமம் - சூத்திரம் - புரியாத வங்கி வட்டாரங்கள் சில "இது வெறும் விவர சேகரிப்பு மட்டுமே. வழமையான வங்கிச் சட்ட நடவடிக்கை தவிர வேறில்லை. சம்பந்தப்பட்ட சொத்து மத்திய வங்கியின் கண்காணிப்புக்கு மாற்றப்படும். அவ்வளவுதான்" - என்ற சாரப்பட விளக்கமளித்து வருகின்றன. ஆனால், அது தவறானது.

ஒரு புறம் அவ்வாறு இயக்கப்படாத சொத்துகளின் விவரம் உத்தியோகபூர்வமாகச் சேகரிக்கப்பட, மறுபுறம் அந்தச் சொத்துக்களை மத்திய வங்கி மூலம் அரசுடைமையாக்க வழி செய்யும் 'செயலூக்க மற்ற சொத்துக்கள் (மீட்பு) சட்ட மூலம்' சத்தம் சந்தடியின்றித் திடீரென நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஆளும் தரப்புக்கும் அதன் நேசக் கூட்டமைப்பான ஜே.வி.பிக்கும் இடையிலான 'பிய்ச்சல் பிடுங்கல்' காரணமாக - இழுபறி காரணமாக - நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல், விவாதித்த நிலையில், நிலுவையில் நிற்கிறது அந்தச் சட்டமூலம்.

தமிழர்களை இலக்கு வைத்து - அவர்களின் சேமிப்புச் சொத்தைச் சூறையாடிச் சுருட்டும் எண்ணத்துடன் - நாசூக்காக நகர்த்தப்படும் நடவடிக்கையே இது என்பது தெளிவு.

பாதுகாப்புக் கருதி அரச வங்கிகளில் தங்கள் உழைப்பையும், முதலீட்டையும் சேமித்த பல லட்சம் தமிழர்கள் நாட்டு நிலைமை காரணமாகப் புலம் பெயர்ந்துள்ளனர். நாட்டின் யுத்த நிலைமை காரணமாகவும், தாம் தஞ்சம் புகுந்த இடங்களில் தங்களின் நிலைமையை ஸ்திரப்படுத்தாமல் அங்கிருந்து வெளியேற முடியாது என்ற இக்கட்டுக் காரணமாகவும் அவர்கள் தாயகம் திரும்ப முடியாமல் உள்ளனர். இதனால், இங்குள்ள தங்கள் வங்கிக் கணக்குகள், சொத்துக்களை சட்ட ரீதியாக இயக்குவதில் அவர்கள் பெருத்த நெருக் கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மேலும், சொத்துகள், வங்கிக் கணக்குகளுக்கு உரிய பலர் வெளிநாடுகளில் அல்லது உள்நாட்டில் உயிரிழந்த நிலையில் அவர்களின் உரித்தாளிகள் நாட்டுக்கு வந்து இந்தச் சொத்துக்களுக்கு உரிமை கோரும் சட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலையில் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ளனர்.

இத்தகையோரின் சொத்துக்களைச் சூறையாடும் திட்டமாகவே இந்த 'செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்பு) சட்ட மூலம்' என்ற நகர்வு அரசுத் தரப்பால் முன்னெடுக்கப்படுகின்றது.

நாடு முழுவதுக்குமாக இச்சட்டம் கொண்டு வரப்பட்டாலும் கூட, இதனால் பெரிதும் பாதிப்புறப் போகின்றவர்கள் யுத்தத்தால் புலம் பெயர்ந்த வடக்கு-கிழக்குத் தமிழர்கள்தாம்.

*"அரச வங்கிகளில் வைப்பிலிடப்பட்டிருக்கும் புலம் பெயர்ந்த பத்து லட்சம் தமிழர்களின் பல கோடிக் கணக்கான ரூபா நிதியை அரச உடைமையாக்கி அதை யுத்தத்திற்குப் பயன்படுத்த அரசு முயற்சிக்கிறது. அதற்காகவே அரச வங்கிகளில் உள்ள இயங்காத சொத்தை அரசுடைமையாக்கும் வங்கி மற்றும் நிதி தொடர்பான சட்ட மூலத்தை அரசு அவசர அவசரமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருகின்றது. தமிழர்களுக்கு எதிராகவும், யுத்தத்தைத் தொடங்குவதற்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கையே இது."* - என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழர் தாயகத்தில் - குறிப்பாக யாழ். குடாநாட்டில் - பல லட்சக் கணக்கான மக்களை அவர்களது பாரம்பரிய வாழிடங்கள், வீடுகள், நிலபுலன்களிலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் அப்புறப்படுத்தி, அகற்றி, அகதிகளாகத் துரத்தி விட்டு விட்டு, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சுமார் பதினைந்து வருட காலம் அச்சொத்துக்களை ஆக்கிரமித்து நிற்கும் அரசு, இப்போது வங்கிகளில் இருக்கும் அவர்களது சொத்துக்களையும் அடியோடு கபளீகரம் செய்து அவர்களை நிரந்தர ஓட்டாண்டிகளாக்கத் திட்டமிட்டுச் செயற்படுகிறது.

அதன் ஒரு கட்டமே இந்தப் புதிய சட்டமூலம்.

தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக சொத்துப் பறிப்பு செயற்பாடு அரங்கேறுகின்றது.

# காயமடைவோர் எண்ணிக்கை அதிகரிப்பு; நெருக்கடியால் குருதிக்குத் தட்டுப்பாடு!

## யாழ். இரத்த வங்கி வைத்திய அதிகாரி கவலை

யாழ்ப்பாணம், ஜூலை20

குடாநாட்டில் காயமடைவோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது. ஆனால் இரத்தத்துக்கோ பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி எம்.சிவசங்கர் கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் என்றுமில்லாதவாறு இரத்தத்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அதிலும் 'நெகடிவ்' வகை இரத்தத்துக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. இந்தக் குருதித் தட்டுப்பாடு நீடித்தால் விரும்பத்தகாத பின் விளைவுகளை எமது சமூகம் சந்திக்க வேண்டி ஏற்படும்.

இதேவேளை, பல்வேறு சம்பவங்களிலும் காயப்படுபவர்களின் எண்ணிக்கை முன்னரைவிட தற்போது அதிகரித்துள்ளது. குருதிக்கான தேவையும் அதிகரித்துள்ளது. இதுவே குருதித் தட்டுப்பாட்டிற்கான பிரதான காரணமாகும்.

குருதிக் கொடையாளர்கள் பலரும் இரத்த தானம் செய்வதற்கு ஆவலாக இருக்கிறார்கள். அவர்களை ஒருங்கிணைத்து இரத்ததான முகாம்களை நடத்திக் குருதியைப் பெறமுடியாத பாதுகாப்பு சிக்கல் தோன்றியுள்ளது.

கடந்த காலங்களில் ஓட்டோ சங்கம், சிகை அலங்கரிப்புச் சங்கம், வர்த்தக சம்மேளனங்கள் போன்ற அமைப்புகள் கட்டம் கட்டமாக இரத்த தானத்தினை ஏற்பாடு செய்து வந்தன.

தற்போது இவர்களை ஒருங்கிணைத்து குருதியைப் பெற்றுக்கொள்வதற்கு உகந்த சூழல் இல்லை. அத்துடன், அவர்களுக்கான பாதுகாப்பையும் எம்மால் உத்தரவாதப்படுத்த முடியவில்லை.

பல்வேறு தரப்பைச் சேர்ந்த மக்களும் குருதிக்கொடைக்கு விருப்பம் கொண்டிருந்த போதிலும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத நிலையில் இரத்த வங்கி உள்ளது.

இந்த நிலை தொடர்ந்தும் நீடித்தால் இரத்த வங்கிக்கான குருதியை அநுராதபுரம், வவுனியா போன்ற பகுதிகளிலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம்.

குருதிக்கொடைக்கு விருப்பம் கொண்டிருப்பவர்கள் இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு தமது குருதி வகைகளை அறிந்த பின்னர் குருதியை வழங்க முடியும்.

அத்துடன் பிரதேச மட்டங்களில் உள்ள சமூக அமைப்புகள் இரத்த வங்கிச் சேவையை ஒழுங்குபடுத்தித் தருமிடத்து இரத்தவங்கியினர் அவ்விடத்தில் நடமாடும் சேவையை நடத்தத் தயாராகவே இருக்கின்றனர்.

இக் கொடையாளருக்கான ஊக்குவிப்புச் செயற்பாடுகளும் நடத்தப்படவுள்ளன - இப்படி வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ரி)

## படைத்தரப்பின் நெருக்கடிகள் குறித்து பல்கலை.நிர்வாகம்-இராணுவம் சந்திப்பு

### பலாலியில் இன்று நடைபெறும்

யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும், படைத்தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு இன்று காலை 10 மணிக்கு பலாலியில் உள்ள மாவட்ட படைத் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையிலான குழுவினர் படைத்தரப்பில் பொதுசனத் தொடர்பாளர் பெரேராவினை இன்று சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளை முடித்துக்கொண்டு வெளியேறிய மாணவ மாணவியரை யாழ். பரமேஸ்வராச் சந்தியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் வழிமறித்து நீண்ட நேரம் தடுத்து வைத்துச் சோதனையிட்டனர். இதனால், மாணவர்களுக்கும், படையினருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், பல்கலைக்கழக பதில் துணைவேந்தரின் தலையீட்டால் நிலைமை சீராகியது என்பது தெரிந்ததே.

படைத்தரப்பினரால் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்படும் என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (13)

## மீன்பிடியியல் டிப்ளோமா: திங்களன்று எழுத்துப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை20

யாழ். பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான எழுத்துப்பரீட்சைகள் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இதேவேளை - மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்த வெளிமாவட்ட மாணவர்களுக்கான நேர்முகப்பரீட்சையும் அன்றையதினம் நடைபெறும் என்றும்-

ஏனைய மாணவர்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி நேர்முகப் பரீட்சை இடம்பெறும் என்று கடலகவள இணைப்பாளர் பேராசிரியர் க.சித்திரவடிவேல் தெரிவித்தார். (13)

## ஆடி அமாவாசை அன்று வணிக நிலைய ஊழியருக்கு விடுமுறை வழங்கப் பணிப்பு

ஆடி அமாவாசைத் தினமான எதிர்வரும் திங்கட்கிழமை சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்படவேண்டும் என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

வர்த்தக ஊழியர்கள் விடுமுறை தினமான அன்று ஆடி அமாவாசை பிதிர்க் கடன்களைச் செய்ய வசதியாக இருக்கும் என்பதால் இந்த விடுமுறை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.(204)

## இராமாவில்- கொடிகாமம் வீதியில் பனைமரங்கள் தீயிட்டு அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை20

தென்மராட்சியில் இராமாவில் தொடக்கம் கொடிகாமம் வரையான வீதியின் ஓரமாக உள்ள மரங்கள் குறிப்பாக பனைமரங்கள் தீயிடப்பட்டு அழிக்கப்படுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொள்கலன்களில் எடுத்து வரப்படும் எரிபொருள் மரங்கள் மற்றும் பற்றைகள் மீது வீசப்படுவதாகவும்-

மாலை வேளையில் தீயிடப்பட்டு அவை எரிக்கப்படுகின்றன என்றும்- தெரிவிக்கப்படுகிறது.

வீதியோரங்களில் கிளைமோர் குண்டுகள் பொருத்தப்படலாமென்ற அச்சம் காரணமாகவே இந்தத் தீயிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கருதப்படுகிறது.

இதில் அதிக எண்ணிக்கையில் பனைமரங்கள் தீயில் கருகுகின்றன என்றும் கூறப்படுகிறது.

இரண்டாயிரமாம் ஆண்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தால் தென்மராட்சியில் கணிசமான பனை வளம் அழிவுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

## திருத்திப் புறப்பட்ட தினத்திலேயே குமுதினி படகு மீண்டும் பழுதானது

நல்லூர்,ஜூலை20

நெடுந்தீவுக்கான கடல் போக்குவரத்தில் ஈடுபடும் அரச படகான 'குமுதினி' திருத்த வேலைகளின் பின்னர் கடந்த 16ஆம் திகதி சேவையில் மீண்டும் ஈடுபடுத்தப்பட்டது. ஆனால், அன்றையதினமே அது பழுதடைந்ததால் சேவையிலிருந்து ஒதுங்கியது.

குமுதினிப் படகில் பழுது ஏற்பட்டதால் பல நாள்களாகக் கரையேற்றப்பட்டிருந்தது. ஒருவாறாகத் திருத்தப்பட்டு கடந்த 16 ஆம் திகதி மீண்டும் சேவையில் அந்தப் படகு ஈடுபடுத்தப்பட்டது. அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு குறிகாட்டுவான் அது சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து நெடுந்தீவுக்குத் திரும்பப் புறப்பட்டபோது படகில் பழுது ஏற்பட்டது. ஆயினும் அங்கிருந்து முற்பகல் 10 மணியளவில் புறப்பட்ட குமுதினிப் படகு ஒருவாறு நெடுந்தீவை வந்தடைந்தது. அதன் பிறகு மீண்டும் சேவையிலிருந்து ஒதுங்கியுள்ளது. (111)

### நாளை

ஆடி - 05
வெள்ளிக்கிழமை
21.07.2006
திதி : ஏகாதசி
முற்பகல்: 10.58
நட்சத்திரம் : றோகினி
முன்னிரவு : 11.53
சுபநேரம் : 06.01 - 07.31
ராகுகாலம் : 10.31 - 12.01
ஏகாதசி விரதம்

## மருந்தகங்களில் சட்டவிரோத சிகிச்சை; கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல மருந்தகங்களில் சட்ட விரோதமாக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் மருந்தகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாவட்டத்தில் இயங்கும் பல மருந்தகங்களில் சட்ட விரோதமாக சிகிச்சை அளிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஏற்புத்தடை ஊசி போடுதல், காயங்களுக்கு மருந்து கட்டுதல், சில நோய்களுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற செயற்பாடுகளில் பல மருந்தகங்கள் ஈடுபட்டுள்ளன.

இதனால் சில மரணங்கள் ஏற்பட்டுள்ளமை எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இப்படியான சிகிச்சை நடவடிக்கைகளில் ஈடுபட மருந்தகங்களுக்கு எவ்வித உரிமையோ அல்லது அங்கீகாரமோ கிடையாது.

மக்களின் உயிரோடும், உடல் நலத்தோடும் விளையாடும் இந்த விபரீதமான நடவடிக்கைகளை உடன் நிறுத்திக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட மருந்தகங்களுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. இதனையும் மீறி செயற்பட்டால் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் மருந்தகங்களில் இப்படியான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டால் உடனடியாக அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவித்து ஒத்துழைப்பு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (204)

### உதயவாக்கு

தனக்கென வாழ்பவன் விலங்கு, தனக்கும் பிறருக்குமாக வாழ்பவன் மனிதன். பிறருக்காக வாழ்பவன் தேவன்.
- பொன்மொழி.

# கடலட்டை கடத்திய நால்வர் கைது!

கொழும்பு,ஜூலை20

சட்டவிரோதமாக 760 கிலோகிராம் கடலட்டைகளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வாகனமொன்றில் எடுத்துச் சென்ற நால்வர் சிலாபத்தில் வைத்து பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். சிலாபம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட அவர்களுக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அவர்கள் எடுத்துச் சென்ற கடலட்டைகளை மீன்பிடி மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மானிப்பாயைச் சேர்ந்த நால்வருக்கே மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது.

(206)

# இலவச பாட நூல்

தென்மராட்சி, ஜூலை 20

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு இதுவரை வழங்கப்படாத இலவச பாட நூல்களின் ஒரு தொகுதி கடந்த சனிக்கிழமை கோப்பாய் கல்விக் கோட்ட அலுவலகத்திற்கு வந்துள்ளது.

இலவச பாடநூல்கள் அந்தந்த கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு இவ்வாரம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள தெரிவித்தன.

(117)

## தேவை

காரியாலயம் ஒன்றுக்கு சிற்றூழியர் அல்லது உதவியாளர் தேவை.

தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும்.

**தொடர்பு:**

எம்.இராஜநாயகம் அன் கம்பனி,
இல.140,பலாலி வீதி,பரமேஸ்வரா சந்தி
(பெற்றோல் செற் முன்பாக) 021 222 2478

WE SERVE

## வடமராட்சி பொது மருத்துவமுகாமும் கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கும் நிகழ்வும்

**இடம்:**

சிவப்பிரகாச மகாவித்தியாலம், தும்பளை

**காலம்:**

23.07.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணி வரை

மேற்படி நிகழ்வு வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் இலவசமாக நடத்தப்படும்.

1. பொது மருத்துவமுகாம் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளைஅவர்களின் தலைமையில் மருத்துவக்குழுவினரால் நடத்தப்படும்
2. கண்பரிசோதனை:- மருத்துவ பரிசோதனைக்குழுவினரால் நடத்தப்பட்டு இலவச கண்ணாடி வழங்கும் வைபவம் நடைபெறும்.
3. நீரிழிவு நோய்க்கான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு உரிய நிவாரணம் வழங்கப்படும்.
4. சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை தும்பளை, கற்கோவள மக்கள் தமது பதிவுகளை பருத்தித்துறை சுசீலா நகை மாளிகையில் பதிவு செய்து முன்மாதிரியாக நடந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

வடமராட்சி லயன்ஸ் கழகம்,
பருத்தித்துறை .

டாக்டர் எம். தங்கராசா
தலைவர்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி.கணேஸ்வரி தனமூர்த்தி
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி.செல்லம்மா கணேசலிங்கம்**

அவர்களின் மறைவையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

## யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்
### விலை கூறல்
### புதிய கணனிகள் Pentium-4

எமது தேவைக்கு பத்து புதிய கணனிகள் கொள்வனவு செய்ய இருப்பதால் அவற்றை விநியோகம் செய்ய விரும்புவோர் (பதிவு செய்யப்பட்டோர்) இதற்கான படிவத்தை எமது பாடசாலை அலுவலகத்தில் பெற்றுத் தங்கள் கூறுவிலைப் பத்திரத்தை 31.07.2006 இற்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கவும்.

அதிபர்,
19.07.2006 யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி., சுழிபுரம்.

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை, மல்லாகம்
# கேள்வி அறிவித்தல் - 2006

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் ' இக்ராட்' நிறுவனத்தில் தரம் 'எம் 9 ' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடம் இருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் கடைசித்திகதி :- 25.07.2006 செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிவரை

கேள்விகள் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 03.08.2006 வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 03.08.2006 வியாழக்கிழமை பி.ப. 2 மணிவரை

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'செயலாளர், வலி.வடக்கு பிரதேச சபை, மல்லாகம்'' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது புதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள் விப் பத்திரப் பணம் (வற்உட்பட) |
|---|---|---|---|
| 01. | தேவாலய வீதி புனரமைப்பு , மல்லாகம் | 15000/- | 575/- |
| 02. | அலுக்கை வீதி புனரமைப்பு, அளவெட்டி | 15000/- | 575/- |
| 03. | யாமா வீதி புனரமைப்பு, தெல்லிப்பழை | 12000/- | 575/- |
| 04. | காங்கேசன்துறை பொதுநூலகம் கட்டடத் திருத்தவேலை நீதிமன்ற வீதி, மல்லாகம். | 5000/- | 575/- |
| 05. | கூத்தன் சீமாச் சந்தை கிணறு அமைத்தல், பன்னாலை | 3000/- | 575/- |
| 06. | கூத்தன் சீமாச் சந்தை மலசலகூடம் அமைத்தல், பன்னாலை | 1500/- | 575/- |

இது தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில்பெற்றுக்கொள்ளலாம்.

*வலிகாமம்வடக்குப் பிரதேச சபை,*
*தலைமையலுவலகம்,*
*காங்கேசன்துறை, மல்லாகம்,* (சி-50305)
*19.07.2006*

திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம்,
செயலாளர்
வலிகாமம் வடக்குப் பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**University of Jaffna will entertain applicaions from suitably qualified persons for the under mentioned posts.**

### FACULTY OF AGRICULTURE

1. **Senior Professor / Professor** in Agricultrual Biology / Agricultural *Chemistry / Agronomy / Agricultrual Economics*
2. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lectruer (Probationary) in** Agricultrual Biology / Agricultrual Economics

### FACULTY OF ARTS

1. **Senior Professor / Professor in** Tamil / Education / Fine Arts / *Linquistics Law*
2. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lectruer (Probationary)** in Arts & Design *(Painting & Sculpture / Multimedia Design / Computer Graphics / Educaication (Applied Science /Social Science)* / Hindu Philosophy / Law / Archeology

### FACULTY OF MANAGEMENT STUDIES

1. **Senior Professor / Professor** in Commerce / Business Administration
2. *** *Senior Lecturer Grade I / Senior Lecturer (Probationary)*** in Commerce
3. ***Instructor in*** Computer Technology Grade II

### FACULTY OF SCIENCE

1. **Senior Professor / Professor** in Mathematics / Statistics / Physics / Botany / Zoology / *Fisheries Biology / Computer Science / Chemistry* (Physical Chemistry)
2. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lectruer (Probationary)** in Mathematics / Statistics ** Physics / Botany / Chemistry (Physical Chemistry)
3. **Assistant Lecturer (on Contract) / * Demonstrator (on Contract)** in Botany / Chemistry / Physics / Zoology
4. **Assistant Lecturer (on Contract) / * Instructor (on Contract)** in Mathematics and Statistics, Computer Science.

### COMPUTER UNIT

*** Instructor in Computing (on Contract)**

### UNIT OF SIDDHA MEDICINE

**Assistant Lectrurer (On Conract) / * Demostrator (on Contract)**

*Note*

* Proference will be given to those who possess knowledge information Technology and / or Business Law

* Candidates who are waiting the result of final degree examinations may also apply for the post of demonstrator (on Contract) / Instructor (on Contract).

** Preference will be given to those who have B,Sc (Eng) degree with Specialization in Electronics.

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs. 41890 - 3x605 - 43705 /- p.m |
| Professor | Rs. 37050 - 8x605 - 41890 /- p.m |
| Senior Lecturer Grade I | Rs. 32650 - 8x525 - 36850 /- p.m |
| Senior Lecturer Grade II | Rs. 28225 - 5x525 - 36850 /- p.m |
| Lecturer (Probationary) | Rs. 18300 - 1x420 - 9x460 - 22860/-p.m |
| Instructor in Computer Technology Grade II | Rs. 16870 - 3x420 - 18130 (EB) p.m<br>Rs. 19810 - 13x460 - 25790 p.m |
| Assistant Lecturer (On Contact) | Rs. 14350/- p.m *(Fixed)* |
| Demonstrator (On Contract) | Rs. 14350/- p.m *(Fixed)* |

***Note*** In addition to the above salary, the allowances approved by the University *Grants Commission will also be paid*

***Statutory benefits:***

1. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Grade II and above
2. Membership in Universities Provident Fund and Pension Seheme in the University system
3. Gratuity payments
4. Employees' Trust Fund benefits
5. Free Medical Services

**Closing date**

**Senior Professor / Professor - 20.10.2006**
**other permanent Posts - 20.09.2006**
**Contract post - 16.08.2006**

An application for the post of Senior Professor should be accopanied by the following in accordance with the University Grants Commission Circular no.838 dated 26.01.2004.

a) The Curriculum Vitae
b) A self assessment of his.her whole career specifying the contribution to the following fields after he/she became a professor.
Teaching and acadamic development .
Research and creative work
Dissemininațion of knowledge and University and National Development, **based on a marking scheme** prepared by the UGC, details of which could be obtained from the SAR/Establishments (Acadamic) during working hours.

An application for the post of Professor should be accompanied by the following inaccordance with the University Grants Commission circular No.869 dated 30.11.2005.
a) The Curriculam Vitae
b) A self assessment of his/her whole career specifying the contribution to:
Teaching and acadamic develoment Research and creative work Dissemination of knowledge and University and National Development, based on the marking scheme.
c) Three copies of the publications, research papers and other relevant documents.
d) Title of five outstanding research papers/publications

The documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice - Chanceller with a covering letter.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/= per form. Those who wish to obtain application forms by post are requested to sent a Money Order/ Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/Government Deparment/ Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview for the posts of Lectŭrer akprobationary), Instructor in Computer Technology, Assistant Lecturer (On Contract), Demonstrator (on contract) and Instructor (on contract).

**REGISTRAR,**
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
19.07.2006.

# கிடைக்கும் நிதியைத் தகுந்த முறையில் அதிகாரிகள் பயன்படுத்த வேண்டும்!

## யாழ்.அரச அதிபர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஜூலை20

திணைக்கள அதிகாரிகள் கிடைக்கும் நிதியைத் தகுந்த முறையில் முழுமையாகப் பயன்படுத்துவதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவுறுத்தினார்.

மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டம் அண்மையில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. அதில் பங்கேற்றபோதே அரச அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்குக் கணிசமான நிதி பெறப்படுகின்றது. இவ்வாறு பெறப்படும் நிதி தகுந்த முறையில் செலவிடப்பட வேண்டும். நிதி செலவிடப்படும் நடைமுறையின் அடிப்படையிலேயே அடுத்த வருடத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திணைக்களத் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் சிரமங்கள் மற்றும் பிரச்சினைகள் போன்றவை எது வந்தாலும் கிடைக்கின்ற நிதியை - முழுமையாக - தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

மூலப் பொருள்களின் விலைகளில் தற்போது அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுகின்றன. அரையாண்டிற்கு ஒரு தடவை நடைபெற்று வரும் மாவட்ட விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தை இதன் காரணமாக காலாண்டிற்கு ஒரு தடவை நடத்த வேண்டியுள்ளது.

மேலும் திணைக்களங்களினால் தயாரிக்கப்படும் மதிப்பீடுகள் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேசங்களிற்கும் ஒரே மாதிரியாக இருக்கமுடியாது. பிரதேச தூரம், போக்குவரத்துச் செலவு போன்றவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும். திணைக்களங்களினால் தயாரிக்கப்படும் மதிப்பீடுகளில் வேறுபாடு காணப்பட்டால் பணி ஒப்பந்தகாரர்கள் எழுத்து மூலம் முறையிடலாம். - என்று அரச அதிபர் தெரிவித்தார். (185)

# உடற்கல்வி ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மாகாணக் கல்வி அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் 276 உடற்கல்வி ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் உள்ளன. இந்நிலையிலும் உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் இதுவரையில் யாழ்.மாவட்டத்தில் நியமனம் செய்யப்படவில்லை.

இவ்வாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் மாகாணக் கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்திற்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக் கழகத்தில் 240 இற்கும் மேற்பட்டவர்கள் உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளனர். இதில் 75 பேர் மட்டுமே பரீட்சை மூலம் வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக உள்வாங்கப்படுவர் என கடந்த மூன்றாண்டுகளாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்து வருகின்றது. எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளின் வேலையற்ற நிலை குறித்து தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு எடுத்துக் கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (204-185)

# முள்ளிப் பாலம் புனரமைப்புப்பணி நிறுத்தப்பட்டதற்கு மக்கள் அதிருப்தி

தென்மராட்சி கிழக்கு,ஜூலை20

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதியில் - முள்ளி மயானத்துக்கு அருகில் உள்ள பாலத்தின் திருத்தவேலை இடை நிறுத்தப்பட்டது குறித்து பொதுமக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பாலம் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் பழுதடைந்தது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு இரும்புப் பாலம் அமைக்கத் திட்டமிடப்பட்டு முதற் கட்ட பணியும் ஆரம்பமானது. ஆனால், கடந்த டிசெம்பர் மாதமளவில் திருத்தப் பணி மழையைக் காரணம் காட்டி நிறுத்தப்பட்டது.

இங்கு பொருத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட இரும்புச் சலாகைகள் வீதியோரத்தில் மாதக் கணக்காகப் போடப்பட்டுள்ளன.

இந்தப் பாலத்தின் திருத்த வேலை இடை நிறுத்தப்பட்டது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். (122)

## தென்மராட்சியில் மதிப்பீட்டுப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் 11 பாடசாலை மாணவர்களுக்கு ஈழ ஏதிலியர் புனர்வாழ்வுக் கழக செயல்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மதிப்பீட்டுப் பரீட்சை நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாட ஆசிரியர்கள் இன்று வியாழக்கிழமை தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (204)

## பாடசாலைக்கு தொலைத்தொடர்புக் கருவிகள்

நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு தொலைபேசி, தொலைநகல் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வித்தியாலய அதிபர் திருமதி சாந்தா கிருஸ்ணதாஸின் வேண்டுகோளை ஏற்று தொலைபேசியை லண்டனில் வதியும் நெடுந்தீவைச் சேர்ந்த செல்வரத்தினம் சுரேஸ் வழங்கியுள்ளார். தொலைநகல் இயந்திரத்தை நெடுந்தீவு ஒன்றியத்தின் ஐக்கிய ராச்சிய கிளை மகா வித்தியாலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கியது. (111)

# வாக்காளர் இடாப்பு பதியும் பணி யாழ். மாவட்டத்தில் ஓக. 17 வரை

தென்மராட்சி, ஜூலை 20

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பு பதிவு செய்யும்பணி தற்போது இடம்பெற்று வருவதாக யாழ். மாவட்டத் தேர்தல் அதிகாரி பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்புகளின் பிரதிகள் மாவட்டத் தேர்தல் அலுவலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசஅதிபர் அலுவலகங்கள், உள்ளூராட்சி சபைகள், கிராம அலுவலர் அலுவலகங்கள், அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளர் இடாப்பில் பெயர் பதியப்படாத பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவை மேற்கொள்ளலாம்.

இடாப்பில் பதிவு செய்வோர் தமது பகுதிக் கிராம அலுவலரிடம் உரிய விண்ணப்படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்க வேண்டும். இந்தப் பணி கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 17 ஆம் திகதி வரை இடம்பெறும் .

இவ்வாறு அதிகாரி தெரிவித்தார். (122)

# வடமராட்சியில் மண்ணெண்ணெய் தாராளம்; டீசல் மற்றும் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு

வடமராட்சிப்பிரதேசத்தில்மண்ணெண்ணெய் பற்றாக்குறை நீங்கி தாராளமாகக் கிடைத்து வருகிறது. ஆனால், பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருளுக்கு அவ்வப்போது தட்டுப்பாடு ஏற்படுகிறது.

இப் பிரதேசத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாலும் எரிபொருள் விற்பனை நிலையங்களாலும் தாராளமாக மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்குவதில் கூடிய அக்கறை செலுத்தி வருகிறது.

இதேவேளை- பெற்றோல், டீசல் ஆகியன எரிபொருள் விற்பனை நிலையங்களில் போதியளவு கையிருப்பில் இருப்பதில்லை. பெற்றோலியக் கூட்டுத் தாபனம் எரிபொருள்களை விநியோகித்த கையுடனேயே அவை விற்றுத் தீர்ந்து விடுகின்றன. இதனால் டீசல் மற்றும் பெற்றோலுக்குப் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருகிறது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (173)

## வட பகுதிக்கு 5 புதிய பஸ்கள்

வடமராட்சி,ஜூலை20

இலங்கை போக்குவரத்துச் சபை வட பகுதியில் சேவையில் ஈடுபடுத்தவென ஐந்து புதிய பஸ்களை கப்பல் மூலம் எடுத்துவரவுள்ளது.

இவற்றில் 3 பஸ்கள் பருத்தித்துறை சாலைக்கும் தலா ஒரு பஸ் யாழ்ப்பாணம், காரைநகர் சாலைகளுக்கும் வழங்கப்படவுள்ளன.

கடந்த வாரம் மன்னாரில் சேவையில் ஈடுபடுத்தவென 5 புதிய பஸ்கள் வழங்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (173)

## தும்பளை வீதி புனரமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை20

பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட தும்பளை புனித லூர்த்து மாதா தேவாலய வீதி புனரமைப்பு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகிந்த சிந்தனை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-117)

# கீரிமலைக்குச் சென்று பிதிர்கடன் கழிக்க ஆடி அமாவாசைக்கு அனுமதி கிட்டுமா?

வலி.வடக்கு,ஜூலை20

எதிர்வரும் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித தீர்த்தத்திற்கு செல்லும் வாய்ப்பு இம்முறை கிட்டுமா? என்று பொதுமக்கள் ஏக்கம் தெரிவிக்கின்றனர்.

இறந்த முன்னோர்களுக்கு ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலைப் புனித தீர்த்தத்தில் நீராடி பிதிர்கடன் செலுத்துவது குடாநாட்டில் சைவ மதத்தைப் பின்பற்றுவோரின் சமய வழக்கமாகும். கீரிமலைப் பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமாகப் படைத் தரப்பால் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், அங்கு ஆடி அமாவாசை தினத்தன்று சென்று வருவது நெருக்கடிக்குரியதானது.

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையையடுத்து உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள தெல்லிப்பழை மருத்துவமனை, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம் ஆகியவற்றுக்கும் பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களுக்கும் சென்றுவரும் பொதுமக்கள் பலவித கெடுபிடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 24ஆம் திகதியன்று கீரிமலைக்கு நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் செல்வதற்கு படையினர் எந்த வகையில் அனுமதிக்கப் போகிறார்கள் என்று பொதுமக்களிடம் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கடந்த சில வருடங்களாக தனியார் வாகனங்கள் கீரிமலைக்குச் செல்ல படையினர் அனுமதித்து வந்தனர். இதனால் போக்குவரத்து நெருக்கடி ஓரளவு தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (86)

# சுகாதாரத் தொண்டர் சேவை இம்மாதம்முதல் இடைநிறுத்தம்

வடமராட்சி, ஜூலை20

குடாநாட்டில் பணியாற்றி வந்த சுகாதாரத் தொண்டர்களின் சேவை இம்மாதம் முதல் மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பின் பேரில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் பணியாற்றிவந்த சுகாதாரத் தொண்டர்களில் ஒரு தொகுதியினர் குடாநாட்டில் உள்ள வைத்திய சாலைகளில் சுகாதாரத் தொழிலாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்பட்டன. எஞ்சியோரின் சேவை இம்மாதம் முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியோருக்கு இது வரை காலமும் உலக உணவு நிறுவனத்தினால் மாதாந்த உலர் உணவுப் பொருள்கள் நிவாரணமாக வழங்கப்பட்டு வந்தன. தற்போது சுகாதாரத் திணைக்களத்தினால் சுகாதாரத் தொழிலாளர்களும் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களும் போதுமான அளவு நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்தே சுகாதாரத் தொண்டர்களின் சேவை நிறுத்தப்படுவதாக கூறப்படுகிறது. (173)



தீபம் அமைப்பினர் 'போருட்' நிறுவன அனுசரணையுடன் ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் சிரமதானம் மேற்கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்: ஊர்காவற்றுறை செய்தியாளர்.)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடுவளவு/காணி விற்பனைக்கு

நான்கு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. அத்துடன் 5 பரப்பு நன்னீர் கிணறு உள்ளடங்கலாகக் காணியும் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் வழங்கப்படும். தொடர்பு: பூம்பொழில், நுணாவில், பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. T.P.No: 077 6170686. (52350)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் வர்த்தகர்களுக்கு 37 வயதுக்குட்பட்ட மணமகள்மார் தேவை. மே.பா: 2916, உதயன். (52401)

## வீடு வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் (முளவை சந்தியருகில்) பத்துப்பரப்புக் காணியுடன் நன்னீர் உட்பட சகல வசதிகளுடன் கூடிய வாகனத் தரிப்பிடத்திற்கு உகந்த வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களிற்கும் கல்வி நிறுவனங்களிற்கும் மிகவும் பொருத்தமானது. தொடர்பு: 077 9116330 (52394)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு

மீண்டும் வந்துவிட்டது! றபர் துகள்களால் (Crumbed Rubber) தயாரிக்கப்பட்ட சிறிய பெரிய கலர்ப்பூச்சாடிகள் விற்பனைக் குண்டு. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இடம்மாற்றி வைக்கக்கூடியது. தொடர்பு: க.ஸ்ரீபதி, நவரட்ணராஜா வீதி, நெட்டிலிப்பாய், கோண்டாவில் (DSI ரயர் களஞ்சியத்திற்கு அருகில்) (சி/50299)

# யாழ்.போதனா மருத்துவமனையை அரசு மாற்றாந்தாய் மனத்துடன் நடத்துகிறது!

## ஒன்றுபட்டுக் குரல் எழுப்பி தேவையைப் பெறுவோம் என்கிறார் ஈழவேந்தன்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.போதனா வைத்தியசாலையை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அரசு நடத்துகிறது. ஒன்றுபட்டுக் குரலெழுப்பி தேவையானதைப் பெறவேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலையை நேரில் பார்வையிட்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையின் நிலை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.போதனா மருத்துவமனையின் அனைத்துப் பகுதிகளிலும் இடநெருக்கடி நிலவுகிறது. நோயாளிகள் நலம்பெற முதல் தேவையாக அமைவது நல்ல காற்றோட்ட வசதியாகும். யாழ்.மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளதனால் காற்றோட்ட வசதி இல்லை. நோயாளிகளுக்குப் படுக்கை வசதிகள், குளியலறை, கழிப்பறை வசதியற்று நோய்வாய்ப்பட்டவர்கள் மேலும் நோய்க்கு ஆளாகும் நிலையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மருத்துவமனையின் பிரிவுகள் அனைத்திலும் நாம் விரும்பாத நிலை நிலவுகிறது. ஆனால், புற்றுநோய்ப்பிரிவு எமக்கு ஏக்கத்தைத் தருகின்ற முறையில் புற்றுநோயாளர் தம் நோயைத் தீர்ப்பதற்குப் பதில் மேலும் நோயாளிகளாக மாறுகின்ற அவலநிலை அங்கு நிலவுகிறது. நான் புற்றுநோய்ப் பிரிவிற்குச் சென்று பார்வையிட்டபோது சின்னஞ்சிறு நான்கு அறைகளில் 65 நோயாளிகள் அங்கு படுத்த படுக்கையாக இருக்கின்றார்கள். போதிய கட்டில் வசதியற்ற நிலையில் கட்டில்களின் கீழும் ஏனைய நோயாளிகள் பாயிலும் வெறும் நிலத்திலும் படுத்துப்படுகின்ற இன்னல்களையும் புற்றுநோய்ப் பிரிவில் இடமில்லாத நிலையில் ஏனைய நோயாளிகளின் பிரிவில் அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையையும் எவ்வாறு நாம் எடுத்துரைக்கமுடியும். அப்புற்றுநோய்ப் பிரிவில் பணியாற்றும் பணியாளர்களின் கூற்றின்படி பதியப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 800இற்கும் மேற்பட்டது.

மகரகம புற்றுநோய் மருத்துவமனையில் நோயாளியாக இருந்தோர் முழுமையாகக் குணம் பெறாத நிலையில் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். அவர்கள் வெளிநோயாளர் பிரிவில் வந்து வைத்தியம் செய்துசெல்கிறார்கள். அவர்களுடைய புற்றுநோய் மீண்டும் பரவுவதற்கு வாய்ப்பு உண்டு.

யாழ்ப்பாண மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள சில புற்றுநோயாளர்களுக்கு தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கதிர்வீச்சு மருத்துவம் வழங்கப்படுகின்றது. ஆனால், தெல்லிப்பழை மருத்துவமனை உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதனால் மாலை 5 மணிக்கு முன்பேயே அலங்கோல நிலையில் அவசர அவசரமாக நோயாளர்களுக்கு மருத்துவம் செய்யப்பட்டு பின்பு யாழ்ப்பாண மருத்துவமனைக்குக் கொண்டுவரப்படுகிறார்கள். கோடிக்கணக்கில் பணம் செலவழித்து தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை அண்மையில் திருத்தப்பட்டது. அங்கு சில சிறப்பு மருத்துவர்கள் உளர். அத்தோடு மிக நுண்ணிய மருத்துவக் கருவிகள் உள. இவை மக்களின் தேவைக்காக அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டவை. ஆனால், மருத்துவரின் நுண்ணிய அறிவையோ இம்மருத்துவக் கருவிகளின் திறனோ போதியளவு பயன்படுத்தப்படாது வீணாக்கப்படுகின்றது. அண்மையில் நாடாளுமன்றத்தில் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனை முறையாக இயங்கவில்லை. ஏன் இந்நிலை என்று நலத்துறை அமைச்சரிடம் நான் வினாவினை விடுத்தபோது நேரடிப் பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. சுற்றிவளைத்து திசை திருப்பும் பதில்களே கிடைத்தன.

எனினும், மேலே குறிப்பிடப்பட்டவை போன்று யாழ்ப்பாண மருத்துவர்கள் மீதோ தாதியர் மீதோ அவர்கள் உதவியாளர் மீதோ நாம் குறைகூற விரும்பவில்லை. நெருக்கடியான நிலையில் அவர்கள் ஆற்றும் பணி பாராட்டுதலுக்குரியது. ஆனால், அரசிடம் மாற்றாந்தாய் மனப்பான்மை நிலவுவதால் நல் உள்ளங்கள் படைத்த மருத்துவத் துறைப் பணியாளர்கள் தம் கடமையைச் செம்மையாகச் செய்யமுடியாத நிலை நிலவுகிறது. அரசு போதிய நிதியுதவியையும் கட்டட வசதிகளையும் கூடிய எண்ணிக்கையுடைய மருத்துவர்களையும் தந்துதவவேண்டும். நாடாளுமன்றத்தில் இப்பிரச்சினையை ஒட்டி நாம் பலதடவை குரல் எழுப்பியும் நிறைவு தருகின்ற பதில் எமக்குக் கிடைக்கவில்லை.

இம் மருத்துவமனைக்கு 1163 தாதியர்கள் தேவை. ஆனால், 322 பேர்தான் உள்ளனர். உதவியாளர்கள் 1000 பேர் தேவை. ஆனால், இன்று இருப்பவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 500 தான். சொல்லித் திருந்தும் நிலையில் சிங்கள அரசு செயற்படாது. எனவே, 'அடிக்குமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்' என்பதற்கமைய யாழ்ப்பாண மருத்துவமனையில் நிலவுகின்ற அவல நிலையைப் புட்டுக்காட்டுகின்ற முறையில் அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்றுபட்டுக் குரல் எழுப்பவேண்டும். 'அடம்பன் கொடியும் திரணடால் மிடுக்கு' நாமும் திரண்டெழுந்து குரல் எழுப்பினால் நாம் விரும்பிய பயனை முழுமையாகப் பெறமுடியாத நிலையிலும் ஏதோ சிலவற்றைப் பெறுகின்ற வாய்ப்பாவது கிடைக்கும்.

# சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் சபைக் கூட்டம்

வலி.தென்மேற்கு,ஜூலை20

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவு மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகள் பற்றி பண்டத்தரிப்புப் பிரதேச மக்களுக்கு விளக்கமளிக்கும் மத்தியஸ்தர் தினக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தவிசாளர் கு.ஜெகநாதன் சபையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றி இக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார். (135)

# உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. அன்றையதினம் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவும் வழங்கப்படவிருக்கிறது.

உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களை கல்லூரியின் பீடாதிபதி கேட்டுள்ளார். (1)

# கொழும்புத்துறையில் வீடுகள் மீது தாக்குதல்

வலிவடக்கு,ஜூலை20

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் மூவர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் கொழும்புத்துறைப் பகுதியில் இரண்டு வீடுகள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டன.

அன்றையதினம் பகல் ஆயுதங்களுடன் வந்த கும்பல் ஒன்று வீடுகள் இரண்டை உடைத்து சேதப்படுத்திவிட்டுச் சென்றன என்று கூறப்படுகிறது.

அப்பகுதியில் தொடரும் கோஷ்டி மோதல்களால் மக்கள் மாலை நேரத்தின் பின்னர் நடமாடப் பயந்து வீடுகளில் ஒதுங்கிக்கொள்கின்றனர்.

இப்பகுதியில் நிலவும் பதற்றம் காரணமாக மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்து காணப்படுகிறது. (86)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் ச.இராமநாதன் J.P.U.M

சட்டத்தரணி & நொத்தாரிசு



எமது சங்கத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான திரு. ச.இராமநாதன் காலமானதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்.

(50397)(32-14-15) பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம்.

# ஆறா அமுதே!

## 2 ஆம் ஆண்டு நினைவாக...

மலர்வு 29 - 11 - 1952



உதிர்வு 11 - 08 - 2004

### அமரர் இளையதம்பி அமிர்தலிங்கம்

(ஸ்தாபகர், அமுதர் கல்லுடைக்கும் ஆலை, நீர்வேலி வடக்கு)

வேராகி எம் விழுதான வேந்தே!  
தீராத நோய் தீயாக, எம் தந்தை நீறாக  
ஆறாத்துயர் தந்தாய் அமுதே!  
ஈராண்டாலதந்தோ!  
இடி விழுந்திருண்ட நெஞ்சில்  
நீயே வாழ்கிறாய் அப்பா!  
நெஞ்சாரத் தொழுதோம் உம்மை.

கோப்பாய் தெற்கு. (50390)(32-14-15) -குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றும்

**திருமதி கலைச்செல்வி லோகேந்திரா**

அவர்களது பாசமிகு அன்னை

## திருமதி தெய்வானை வேலாயுதம்

அவர்கள் 18.07.2006 அன்று காலமாகியதையிட்டு அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி. (சி/50300)(32-15-14)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம் (பளை)

வழ/இலக்கம் :-455/2005  
தன்மை :- காணி

வழக்காளி  
பெரியதம்பி சண்முகலிங்கம்  
சுதுமலை தெற்கு, அண்ணாமலை வீதி, மானிப்பாய்.

எதிராளி  
மாரிமுத்து மகேந்திரன்  
விளாத்தியடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

மேற்படி எதிராளிக்கு:

## பகிரங்க அறிவித்தல்

மேற்படி இலக்க வழக்கின் எதிராளியாகிய நீர் இம்மன்றின் நியாயாதிக்க எல்லைக்குள் வசித்து வருவதுடன் வழக்காளியால் உமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் உமக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு மன்றுக்கு தோன்றி பின் தொடர்ச்சியாக மன்றுக்கு சமுகம் அளிக்காமையால் மன்றின் கட்டளைக்கு அமைய இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது. இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 21 நாள்களுக்குள் எதிராளியோ அல்லது அவர் தரப்பில் அக்கறை உடைய நபர்களோ உரித்தானவர்களோ மன்றில் தோன்றி ஆட்சேபனை எதனையும் வெளிப்படுத்தத் தவறின் இவ்வழக்கு குடியியல் நடவடிக்கை சட்டத்துக்கு அமைவாக ஒருமுக விளக்கத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்காளியின் உரிமைக் கோரிக்கைக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகிறேன்.

''மன்றின் கட்டளைப்படி''

2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் நாள்

வரைவு:-து.அச்சுதன்  
வழக்காளி,  
சட்டவாளர்.

பொ.சுப்பிரமணியம்  
பதிவாளர்  
தமிழீழ மாவட்ட நீதிமன்று  
யாழ்ப்பாணம் (பளை).

(சி/50293)(32-15-14)

# மரண அறிவித்தல்

## திருமதி வேலாயுதம் தெய்வானை

மாவோடை, திக்கத்தைப் பிறப்பிடமாகவும் 'திருத்தணிகை' பாடசாலை வீதி, வதிரி, கரவெட்டியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் தெய்வானை அவர்கள் 18-07-2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் சி.வேலாயுதம் (இளைப்பாறிய அதிபர்)அவர்களின் அருமை மனைவியும் கலைவதனி (அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்), சரவணபவன் (கனடா), கலைச்செல்வி (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்), ஞானசம்பந்தன் (ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்) ஆகியோரது பாசமிகு தாயும் க.கிருஷ்ணகுமார் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்), ச.சிந்துஜா (கனடா), இ.லோகேந்திரா (யாழ். காணிப் பதிவகம்), ஞா.நிருஜா (கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரி) ஆகியோரது அன்பு மாமியும் கி.அபிரா, கி.யுவேகா, ச.அபிஷேக், ச.றபீசன், லோ.ஜனனி ஆகியோரது அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21-07-2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் திக்கம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 021-226 4310  
நெல்லியடி கிழக்கு,  
கரவெட்டி. (52399)(26-32-14-15)

தகவல்:  
வே.ஞானசம்பந்தன்  
(மகன்).

# சிற்றாறுகள் மூலம் கடலில் கலக்கிறது நன்னீர்; ஒட்டுசுட்டானில் பயிர்ச்செய்கையாளர் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஜூலை20

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள பல சிற்றாறுகள் மூலம் நன்னீர் வீணாகக் கடலில் கலப்பதால் பயிர்ச்செய்கைக்குத் தேவையான தண்ணீரைப் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதென்று விவசாயிகளால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் கலக்கும் சிற்றாறுகளை மறித்து அணைகட்டுவதன் மூலம் பல ஏக்கர் நிலங்களில் பயிர்செய்வதற்குத் தேவையான தண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முத்துஜயன்கட்டுத்திட்டத்தின் கீழ் பயிர் செய்யப்படும் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகளைத் தவிர மேலும் இருமடங்கு விவசாயிகள் நீர் வசதி இன்றி பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாது பெரும் கஷ்ரங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆறுகளை மறித்து அணை கட்டினால் அதன் மூலம் கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு தரிசுநிலங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு பல விவசாயக் குடும்பங்கள் நன்மையடைய முடியும்.

குருவிச்சை ஆறு, கிடா ரஞ்சை ஆறு போன்ற பல ஆறுகள் மூலம் பல ஏக்கர் நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும்.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு கடலுடன் கலக்கும் சிற்றாறுகளை மறித்துக்கட்டி விவசாயிகளின் வறுமை நிலையைப் போக்கி உதவ முன்வர வேண்டுமென்று விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(203-341)

## கண்டாவளைப் பிரதேசத்தில் கால்நடை வைத்தியநிலையம்

பரந்தன்,ஜூலை20

கண்டாவளைப் பிரதேசத்திற்கான கால்நடை வைத்தியநிலையம் ஒன்று அண்மையில் புளியம்பொக்கணைச் சந்தியில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைப் பகுதி மக்களின் நன்மை கருதி இந்த கால்நடை வைத்தியநிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும்-

கால்நடை வளர்ப்பவர்கள், பண்ணையாளர்கள் அனைவரும் தங்கள் கால்நடைகளுக்கான சிகிச்சைகளை இங்கு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் கால்நடை வைத்தியநிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் கால்நடை வைத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளமையால் கால்நடைவளர்ப்போர் பெரும் நன்மையடைவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(203-352)

## துணைப்படையில் இணைந்தனர்

பரந்தன்,ஜூலை20

வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியைச் சேர்ந்த 30இற்கும் அதிகமான மக்கள் தம்மை தமிழ்த்தேசியத் துணைப்படையில் இணைத்துக்கொண்டனர்.

சமகாலச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு கருத்தரங்கு ஒன்று அண்மையில் ஒலுமடுப் பகுதியிலும் நடைபெற்றது.

நெடுங்கேணிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பிறையாளன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்நிகழ்விலேயே இவர்கள் தம்மைத் துணைப்படையில் இணைத்துக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-352-ரி)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

## 'எலும்புக்கூட்டின் வாக்குமூலம்'

கிளிநொச்சி,ஜூலை20

அனாமிகன் எழுதிய 'எலும்புக்கூட்டின் வாக்குமூலம்' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகவேல் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் அருள் ஆகியோர் பொதுச் சுடரேற்றினர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார்.

இதனையடுத்து வெளியீட்டுரையை அன்ரன் அன்பழகன் நிகழ்த்தினார். தொடர்ந்து நூலைத் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார். நூலின் மதிப்பீட்டுரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, படைப்பாளர் நிலாந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் கருத்துரை நிகழ்த்தினர்.

(203-405)



கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மல்லாவி மத்திய கல்லூரியில் நடத்திய சுகாதார மேம்பாட்டு நாடக நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நாடகம் இடம்பெற்ற காட்சி ஒன்றையும் கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி அதிபர் சு.கோபிதாஸ் மற்றும் ஆசிரியர்களுடன் மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-பரந்தன் செய்தியாளர்)

## பூநகரியில் வாகனம் திருத்துமிடங்களில் சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்தல்

வெள்ளாங்குளம்,ஜூலை20

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள வாகனங்கள் திருத்துமிடங்களை சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப அமைக்கும்படி தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது குறித்து சுகாதார சேவைகள் பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் திருத்துமிடங்கள், ரயர் பராமரிப்பு நிலையங்கள், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் திருத்துமிடங்கள் போன்றவை சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கவேண்டும்.

நடைப்பாண்டுக்கான சுற்றாடல், சுகாதார பாதுகாப்பு உரிமம் பெறப்படவேண்டும். நிலையங்களில் சுத்தம், சுகாதாரம் பேணப்படவேண்டும். பிரதேச சபையின் அனுமதி, சுகாதார சேவைகள் பிரிவின் ஆய்வறிக்கை ஆகியவற்றை பெற்றுக் குறிப்பிட்ட நிலையங்கள் அமைக்கப்படவேண்டும். வாகனச் சக் கரங்கள் மற்றும் அவற்றுக்கான ரயர்கள் நீர் தேங்கக் கூடியதாக வைக்கப்படக்கூடாது. பெயர்ப்பலகை அமைக்கப்படவேண்டும். பணியாற்றும் ஊழியர்கள் உட்பட எவருக்கும் ஏற்புநோய் அல்லது டெங்கு, மலேரியா நோய்கள் பரவாது பாதுகாப்பு நடவடிக்கை பேணப்படவேண்டும்.

இந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில் மேற்படி உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (415)

## ஊரக மேம்பாட்டு பேரவை நிர்வாகிகள்

பரந்தன்,ஜூலை20

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக்கேணி கிராமத்துக்கான ஊரக மேம்பாட்டுப் பேரவை நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இ.சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்குத் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் பாலையை மற்றும் கடற்புலிப் போராளிகளான குகன், அண்ணாத்துரை ஆகியோருடன் கிராம மக்களும் கலந்துகொண்டனர்.

இப்பேரவையின் தலைவராக சீவரத்தினம் லிங்கேஸ்வரனும் செயலாளராக யாக்கோப்பு எட்வின் ஜெயராமும் பொருளாளராக சின்னப்பு தட்சணாமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் மேலும் பன்னிரண்டு நிர்வாகத்தினருமாக மொத்தம் பதினைந்து அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப் பட்டனர்.(203-352-ரி)

## கரைச்சிக்கோட்டத்தில் நடைபெற்ற கணித, விஞ்ஞானப் போட்டி முடிவுகள்

வட்டக்கச்சி,ஜூலை20

கரைச்சிக் கோட்டப் பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட கணித, விஞ்ஞானப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

தரம் 6முதல் 11 வரையான மாணவர்களுக்குக் கணிதப் போட்டிகளும், தரம் 7 முதல் 11 வரையான மாணவர்களுக்கு விஞ்ஞானப் போட்டிகளும் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**கணிதப் போட்டி முடிவுகள்**

**தரம் 6** - ர.மலரினி - புனித திரேச பெண்கள் கல்லூரி, ஜே.இமல்டா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, க.செந்துஜன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

**தரம் 7** - ச.பானுப்பிரியன் - கிளிநொச்சி ம.வி., நா.சுடர்வண்ணன் - திருவையாறு ம.வி., யோ.நீல்மாறன் - ஐயனார்புரம் அ.த. க.பா.

**தரம் 8** - ர.வைஷ்ணவி - புனித திரேசா பெண்கள் கல்லூரி, வி.இலதாங்கி - வட்டக்கச்சி ம.வி., ந.லோஜிதா - கனகாம்பிகைக் குளம் அ.த.க.பா.

**தரம் 9** - அ.ஆருத்திரன் - கிளிநொச்சி ம.வி., ச.தேவப்பிரியன் - கிளிநொச்சி ம.வி. யோ.சில்வெஸ்ரன் - கனகபுரம் ம.வி.

**தரம் 10** - பா.மேனகா - உருத்திரபுரம் ம.வி., வீ.சரணவி - வட்டக்கச்சி ம.வி., க. மகிந்தன் - கிளிநொச்சி ம.வி.

**தரம் 11** - ஜோ.சுவேந்தினி - புனித திரசோ பெண்கள் கல்லூரி; ற.ஸ்ரீபன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, அ.கிருஷ்ணானந்தன் - கிளிநொச்சி ம.வி.

**விஞ்ஞானப் போட்டி முடிவுகள்**

**தரம் 7** - அ.சுசிறெஜாளினி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, செ.வினோபானு - கிளிநொச்சி மத்திய கல்லூரி, ம.கலையமிர்தனா - அக்கராயன் ம.வி.

**தரம் 8** - ச.வேனிவன் - கிளிநொச்சி இந்துக்கல்லூரி, சி.தர்சியா - கிளிநொச்சி ம.வி., ல.நிரோஜன் - புனித பற்றிமா றோ.க.த.க.பா.

**தரம் 9** - ம.பகீரதன் - கிளிநொச்சி ம.வி., ச.சிந்துஜா - புனித பற்றிமா றோ.க.த.க.பா., கே.கீர்த்தனா - புனித பற்றிமா றோ.க.த.க.பா.

**தரம் 10** - சே.சுப்ரஜா - திருவையாறு ம.வி., ச.தமிழேந்தி - திருவையாறு ம.வி., தி.கீதாலயன் - கிளிநொச்சி ம.வி.

**தரம் 11** - தி.துளசிகன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி, ப.மனோஜினி - கிளிநொச்சி மத்திய கல்லூரி, செ.கிருசிகன் - இராமநாதபுரம் ம.வி. (203-405)

## வத்திராயனில் சுனாமி பாதித்த மக்களுக்குக் கால்நடைகள்

பரந்தன், ஜூலை 20

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வத்திராயன் பகுதியைச் சேர்ந்த 40 பயனாளிகளக்குக் கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஐ.நா. உணவு விவசாய நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பசுமைப்புரட்சி நிறுவனத்தால் இவை வழங்கப்பட்டன.

இருபது பயனாளிகளுக்கு தலா மூன்று ஆடுகள் வீதமும் இருபது பயனாளிகளுக்கு தலா ஒவ்வொரு கறவைப் பசு வீதமும் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பசுமைப்புரட்சிக்கான நிறுவன இணைப்பாளர் ஜே.எம். டிரேர்ன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்குத் திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் பாலையா, கிராம அலுவலர், பளைப்பிரதேச பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினார்.

இத்திட்டத்தின் கீழ்ப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(203-352)



மக்கள் படைக் கட்டுமானப் பயிற்சி நிறைவையொட்டி வட்டக்கச்சியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மரதன் ஓட்டப் போட்டிக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் அணியினரையும் கிளித்தட்டுப் போட்டியில் ஈடுபடுவோரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## நீர்ப்பாசனத்திட்ட நெற்செய்கை

ஒட்டுசுட்டான்,ஜூலை20

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாரிய மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 2 ஆயிரத்து 140 ஏக்கர் நிலப்பரப்பில் சிறிய அளவிலான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் கமநல அபிவிருத்தித் திணைக்கள அதிகாரி அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

முத்துஜயன்கட்டுக் குள நீர்ப்பாசனத்தின் கீழும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழும் மேற்கொள்ளப்படும் நெற்செய்கைக்குத் தற்போது மானிய விலையில் உரம் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். ([illegible]41)

# நாடாளுமன்றில் அரசுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கியது ஜே.வி.பி.!

## பல நிதிச் சட்டமூலங்களை ஆதரிக்க மறுத்து முரண்டு பிடிப்பதால் சிக்கல்

கொழும்பு, ஜூலை20

நாடாளுமன்றத்தில் அரசுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கியிருப்பதன் மூலம் தற்போதைய அரசைக் கவிழ்க்கும் தனது கைவரிசையை ஜே.வி.பி. ஆரம்பித்திருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் தனித்து அறுதிப் பெரும்பான்மை இல்லாதநிலையில் ஜே.வி.பியின் தலைமையில் தங்கியிருக்கும் அரசு, ஜே.வி.பி. முரண்டுபிடிப்பதால் ஆட்சியைக் கொண்டிழுப்பதில் பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

அரசு கொண்டுவந்த பல்வேறு நிதிச்சட்டமூலங்களை தன்னுடைய விருப்புக்கு ஏற்றவாறு மாற்றி -திருத்தி- அமைப்பதற்கு அரசு இணங்காவிட்டால் அவற்றை எதிர்த்து நாடாளுமன்றத்தில் வாக்களிக்கப் போவதாக நேற்றுமுன்தினம் சபையில் ஜே.வி.பி. அச்சுறுத்தல் விடுத்ததால் அச்சட்டமூலங்களை வாக்கெடுப்புக்கு விட முடியாத திரிசங்கு நிலை அரசுத்தரப்பிற்கு ஏற்பட்டது.

நிதியமைச்சின் ஆறு சட்டமூலங்களான வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடு) திருத்தச்சட்டமூலம், வங்கித்தொழில் (திருத்தச்சட்டமூலம்), தேசியக் காப்புறுதி, நம்பிக்கை பொறுப்பு நிதியம் சட்டமூலம், செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்பு) சட்டமூலம், கொடுப்பனவு உபாயங்களின் மோசடிகள் சட்டமூலம், சூதாட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் என்பன சபையில் விவாதிக்கப்பட்டன.

ஆனால், இதில் ஒரு திருத்தத்தை ஜே.வி.பி. கடுமையாக ஆட்சேபித்தது. 5 மில்லியன் ரூபாவுக்கு குறைந்த கடன் பெற்றவர்கள் அதனைத் திருப்பிச்செலுத்த முடியாவிட்டால் வங்கியால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாதெனக் குறிப்படும் சட்டத்திருத்தமொன்று கொண்டுவரப்பட்டதையே ஜே.வி.பி. கடுமையாக ஆட்சேபித்தது.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் காலை கூடியபோது இதனைச் சுட்டிக் காட்டிப் பேசிய ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, இந்தச்சட்டத்திருத்தத்தை அரசு வாபஸ் பெறாவிட்டால் மாலை நடைபெறும் வாக்கெடுப்பில் ஜே.வி.பி. சட்டமூலங்களை எதிர்த்து வாக்களிக்குமென்று கூறினார்.

அதேபோல், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தியும் தமது உரையின்போது ஜே.வி.பியின் நிலைப்பாட்டை வலியுறுத்திக் கூறினார். ஜே.வி.பியின் இந்த நிலைப்பாடு அரசுக்கு பெரும் ஆச்சரியத்தையும் திடீர் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

மூத்த அமைச்சர் கள் சிலர் இந்த நிலைமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மந்திராலோசனை நடத் தினர். ஜே.வி.பியின் இந்த கடும் போக்குக் குறித்து ஜனாதிபதி அப்போது தமது அதி ருப்தியை வெளியிட்டாரெனத் தெரியவந்தது. இந் நிலையில் மேற்படி சட்டமூலங்களை வாக்கெடுப்புக்கு விடாதிருப்பது பற்றியும் நேற்று முன்தினம் ஆராயப்பட்டது.

முன்னதாக இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புச் சம்பந்தமான அரசாங்கத்தின் சட்டமூலத்தை ஜே.வி.பி. எதிர்த்த காரணத்தினால் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசால் முடியாமற்போனது. இந்நிலையில் நிதிச்சட்டமூலங்களையும் நிறைவேற்றிக்கொள்ளமுடியாமல் ஜே.வி.பி. மேற கொண்ட தடை அரசுக்கு கடுப்பை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ)

## சொந்த இடங்களை விட்டு இடம்பெயர வேண்டாம்!

### திருமலைத் தமிழர்களிடம் விடுதலைப் புலிகள் வேண்டுகோள்

திருகோணமலை, ஜூலை20

திருகோணமலையில் தங்கள் பாரம்பரிய இடங்களை விட்டு தமிழர்கள் வெளியேற வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் கோரி யி ருக்கின்றனர்.

தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து செல்வது எதிரியின் ஆக்கிரமிப்புக்கே உதவும் என்றும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இதுதொடர்பாக புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை கடந்த திங்கட்கிழமை அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருகோணமலையில் எதிரிகளின் கொடூரத் தாக்குதல்களைத் தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள பாரம்பரிய நிலங்களைக் கைவிட்டு இதர வெளிநாடுகளுக்குத் தமிழ் மக்கள் செல்லவேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கிறோம்.

தமிழர்கள் தமது பாரம்பரிய நிலங்களிலிருந்து வெளியேறினால் எதிரியின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கு அது உதவி செய்வதாக இருக்கும். ஆகையால், நம்து பாரம்பரிய நிலங்களை எதிரியானவன் கைப்பற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை தயவு செய்து கொடுக்கவேண்டாம்.

எதிரியிடம் இருந்து நமது பாரம்பரிய நிலங்களை மீட்கும்வரை எந்தச் சூழ்நிலையிலும் நாம் நமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறாமல் இருக்கவேண்( ).

இப்படி அந்த அறிக்கையில் புலிகள் கேட்டிருக்கின்றனர்.

(ஐ)

## பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷுக்கு விரைவில் முழு அமைச்சுப் பொறுப்பு?

கொழும்பு, ஜூலை 20

சுகா: ாப் பிரதியமைச்சர் வடிவேல் சுரேஷுக்கு . அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுப் பொறுப்பு ஒன்றையும், நாடாளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபாவுக்கு பிரதியமைச்சுப் பொறுப்பு ஒன்றையும் வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தேசித்திருக்கிறார் என அறியமுடிகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காமல் இழுத்தடித்து வருவதனால் ஜனாதிபதி இவ்வாறான திட்டம் பற்றி உத்தேசித்திருக்கிறா் ன்று சிரேஷ்ட அமைச்சரொருவர் நேற்றுமுன்தினம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஏற்கனவே இ.தொ.கா. அதிருப்தியாளர்களான வடிவேல் சுரேஷ் மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோர் குறித்து இ.தொ.கா. தலைமைப்பீடம் அரச உயர்மட்டத்துடன் பேச்சுகளை நடத்தியுள்ளது. இ.தொ.கா. அரசுடன் இணைய வேண்டுமானால் பிரஸ்தாப இரண்டு உறுப்பினர்களையும் சற்றுத் தள்ளி வைக்கவேண்டும் என்று இ.தொ.கா. வலியுறுத்தி வந்தது.

எவ்வாறாயினும் நீண்ட நேரப் பேச்சுகளின் பின்னரும் இ.தொ.கா. அரசுடன் இணைவதில் பின்னடித்து வருகிறது. இந்நிலையில் பிரதியமைச்சர் வடிவேல் சுரேஷை அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சராக்குவதற்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபாவிற்கு பிரதியமைச்சர் பொறுப்பொன்றை வழங்குவதற்கும் ஜனாதிபதி உத்தேசித்திருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)


### முதலாம் ஆண்டு நினைவு கூரல்

மலர்வு 22 . 06 . 1928



உதிர்வு 20 . 07 . 2005

**திருமதி கிறேஸ் நேசமலர் செல்லையா**

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கின்றோம்
நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்
ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம்
கர்த்தருடையவர்களாயிருக்கிறோம் *(ரோமர்:14:8)*

*5 ஆம் ஒழுங்கை,*
*மானிப்பாய் வீதி,*
*உடுவில்.*

-குடும்பத்தினர்.

(52362) (39-32-19-14)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம் 21 - 05 - 1926



அஸ்தமனம் 13 - 07 - 2004

**அமரர் Dr. பொன்னையா யோகலிங்கம் (J.P.)**

திதி: 20.07.2006

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் ஆறுமா எம் நெஞ்சம்
ஆயிரம் தான் உறவுகள் இங்கிருந்தாலும்
நிழல் தந்த ஆலமரம் நீங்கள் இப்போ சாய்ந்ததனால்
வேர் அறுந்த விழுதுகளாய் நிழல் தேடி வாடுகின்றோம்
எல்லாம் இருந்தும் இன்று ஏதிலியாய் வாழுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில். (52377) (32-14-19)

மு.சுஜிதா,
இ.விதுஷா.

### 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 - 05 - 1944



விண்ணில் 20 - 07 - 2001

**அமரர் ஜோ.ச.சத்தியநாதன்**

(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர்- பனை அபிவிருத்திச் சபை)

உங்களை இழந்த சோகமதில் நாமிங்கே
ஐந்து ஆண்டுகளாக சோபையிழந்து வாடுகின்றோம்
எங்கள் சோகநிலைதனைப் போக்க ஒரு தடவை
வரமாட்டீர்களா எம் தந்தையே!

மடத்துக்கடவை,
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
மனைவி, மகன்.

(52361) (39-32-19-14)

### ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 - 11 - 1961



உதிர்வு 30 - 07 - 1997

**செல்வி மைதிலி கந்தசாமி**

திதி: 20-07-2006

ஆண்டுகள் ஒன்பது ஓடி மறைந்தும்
ஆறவில்லை உன்துயரம்
மீண்டும் நீ வாராயோ என
தினம் ஏங்கித் தவிக்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதர, சகோதரிகள்.

(52295)(39-32-19-14)

### 17 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 02 . 11 . 1939



உதிர்வு 28 . 06 . 1989

**அமரர் கந்தையா குலேந்திரா S.L.A.S.**

(உதவி அரசாங்க அதிபரும், வலி.கிழக்கு பிரதேச சபை விசேட ஆணையாளரும்)

திதி: 20.07.2006

இப் பாரில் ஆயிரம்தான் உறவுகள் இருந்தாலும்
நிழல் தந்த ஆலமரம் நீங்கள் சாய்ந்ததனால்
வேர் அறுந்த விழுதுகளாய் வாடுகின்றோம்!

"ஈஸ்வரிவாசா"
நந்தாவில்,
கொக்குவில். (52327) (39-32-19-14)

கு.சிவஈஸ்வரி *(மனைவி)*,
கு.சிவேந்திரம் *(மகன்)*,
சகோதரர்கள்.



# சாயி சிந்தனை

## அகங்காரம் அகற்றுவோம்

சமூகத்திலிருந்து விலகி தனியாய் வாழ்வது சாத்தியமல்ல. மனிதன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருவது சமுதாயத்தின் மத்தியில்தான் என்பதையும் ஒவ்வொருவரும் இந்த சமுதாயத்தின் ஓர்அங்கமென்பதையும் நன்குணரவேண்டும். ஆகவே சமுதாய நலனே முக்கியமான குறிக்கோளாகக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். நல்ல மக்களாக வாழ்ந்து நற்கதி பெற சமூகசேவை செய்வதே சிறந்த மார்க்கம். தூய்மையான, எளிமையான தொண்டே மிகச் சிறந்தது. இதில் 'நான் செய்கிறேன்' என்ற அகங்கார உணர்வுக்கு இடமே கொடுக்கக் கூடாது. அகங்கார உணர்வு நாசத்திற்கே வழி தேடும். இராவணன் சகலகலா வல்லவனாக இருந்தான். எல்லாவிதமான பூஜைகளும், சாஸ்திரப்படி சந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மங்களையும் தவறாமல் செய்து வந்தான். எல்லாவிதமான செல்வங்களையும் பெற்று கல்வி கேள்விகளிலும், வீரதீரத்திலும், பலபராக்கிரமத்திலும், தனக்கு நிகர் எவருமில்லை என்றபடி மிகஉயர்ந்த நிலையிலிருந்தான். ஆனால், இவ்வளவு சிறப்பாக எல்லாவிதமான வளங்களும் நிறைந்திருப்பினும் அவனிடம் ஒரே ஒரு பலவீனம் இருந்தது. அதுவே 'அகங்காரம்' இந்த ஒரே பலவீனத்தினால் அவன் கடைசியில் ஒரு குரங்கால் அவமானப்படுத்தப்பட்டு, ஒரு சாதாரண மனித உருவில் இருந்தவரால் தனது முடிவைச் சந்திக்க நேர்ந்தது.

# வடக்கு - கிழக்கு மக்களின் சேமிப்பில் தெற்கில் கடன் வழங்குகின்றது அரசு

## சபையில் ரவிராஜ் எம்.பி. விசனம்

தேசிய சேமிப்பு வங்கியில் 90 சதவீதமான சேமிப்புகள் வடக்கு - கிழக்கு மக்களினுடையவையே. அந்தப் பணத்தை தென்பகுதிக்கு எடுத்து வந்து கடன்வழங்கப்படுகிறது. இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வங்கிகள் மற்றும் நிதி தொடர்பான ஐந்து சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு பேசும்போது கூறியதாவது:-

யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்கில் பல கோயில்கள் மூடிக்கிடக்கின்றன. இக்கோயில்களின் பெயரில் கோடிக்கணக்கான ரூபா பணம் அரச வங்கிகளில் சேமிக்கப்பட்டுள்ளன. மேலும் யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களின் பெருந்தொகையான சேமிப்பு அரச வங்கிளில் இருக்கின்றது. இதன் காரணமாகவே ஜெயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்பு) சட்ட மூலத்தைக் கொண்டுவந்து தமிழ் மக்களின் சொத்துக்களையும், வங்கிச் சேமிப்புக்களையும் அரசுடமையாக்கப் பார்க்கின்றீர்கள். இது ஒரு பகற் கொள்ளையாகும்.

இந்தியாவில் முஸ்லிம் தீவிரவாத அமைப்பொன்று ரயில்களில் குண்டுகள் வெடிக்கச் செய்ததில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஆனால் இந்தியாவில் காழ்ப்புணர்ச்சியில் முஸ்லிம்கள் பழிவாங்கப்பட்டார்களா? கொலைசெய்யப்பட்டார் களா?

இலங்கை வங்கியில் தமிழர்கள் நியமிக்கப்படுவதில்லை. இலங்கை வங்கித் தலைவராக ஜே.வி.பியைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இனவாதப் போக்குடன் செயற்படுகின்றார். திருகோணமலையில் விக்னேஸ்வரன் கொலை செய்யப்படுவதற்கு இவரது அசமந்தப்போக்கே காரணமாகும். உரிய நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க ஒப்புதல் வழங்கியிருந்ததால் அவர் திருகோணமலையில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

தமிழ் மக்களின் சேமிப்புக்களாலேயே அரச வங்கிகள் இயங்குகின்றன.அரசு இச் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் அரச வங்கிகளை பகிஷ்கரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

தொலைக்காட்சிகளில் இந்திய நாடகங்களை ஒலிபரப்பப் பெரும் தொகைப் பணத்தை வரியாக செலுத்த வேண்டியுள்ளது. தமிழ் மக்கள் இந்திய தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதையும் அரசு மறைமுகமாக தடைவிதித்து விட்டதென்றே எண்ணவேண்டி உள்ளது - என்றார் ரவிராஜ். (க)



வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் ஏற்பாட்டில் வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியத்தின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற மாவட்ட முகாமையாளர் சி.நடராசலிங்கம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், பாலசுப்பிரமணியத்துக்கு சுருக்கெழுத்துக் கழக செயலாளர் க.வ.சிவச்சந்திரதேவன் மாலையிட்டு வரவேற்பதையும் அருகில் கழகத் தலைவர் சி.குலசிங்கம் நிற்பதையும் படங்களில் காணலாம். (204)

# வீதிகளை அகலப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்காவிடில் நிதி திரும்பும் நிலை

## நிறைவேற்றுப் பொறியியலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை20

வீதிகளை அகலப்படுத்தும் திட்டத்திற்கு பொதுமக்கள் ஒத்துழைத்தால் இதற்கான நிதி திரும்பிச் செல்வதைத் தடுக்கமுடியும்.

இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் கே.சிவனேசராசா தெரிவித்துள்ளார்.

கடந்த18 ஆம் திகதி உதயனின் ஐந்தாம் பக்கத்தில் 'குடாநாட்டு வீதிகளை அகலமாக்கும் திட்டம்; அசாதாரண சூழ்நிலையால் தடைப்படும் நிலை' என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து அளித்துள்ள விளக்கத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

குறிப்பிட்ட வீதிகளில் வசிக்கும் பொது மக்கள் தமது வேலிகள் அல்லது மதில்களை சிறிது பின் நகர்த்தி ஒத்துழைத்தால் வீதிப் புனரமைப்புப் பணிகளை விரைந்து முன்னெடுக்க முடியும்.

அவ்வாறின்றி பணியில் தாமதமேற்பட்டால் உதவி வழங்கும் நிறுவனங்கள் நிதியை இத்தகைய பணிகள் முன்னெடுக்கப்படும் இடங்களுக்கு மாற்ற வேண்டியேற்படும்.

கிடைக்கும் நிதி பயன்படுத்தப்படாவிட்டால் பணி நடைபெறும் வேறு இடங்களுக்கு அவற்றை மாற்றுவது தவறற்ற செயலாகும். எனவே வீதியோரங்களில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் ஒத்துழைக்காவிட்டால் நிதி வேறிடங்களுக்கு செல்லும் நிலை ஏற்படலாம். அமைதியற்ற சூழநிலையால் நிதி வேறிடங்களுக்குச் செல்வதாகக் நான் கூற வில்லை.

வீதிகள் அகலப்படுத்தப்பட்டுப் புனரமைக்கப்பட்டால் வீதி ஓரங்களில் உள்ள காணிகளின் பெறுமதி அதிகரிக்கும்.

இதனால், சிறு காணித்துண்டை வீதியை அகலப்படுத்த விட்டுக் கொடுப்பதால் பொது மக்கள் நட்டமடையமாட்டார்கள். அத்துடன் வீதிகள் அகலப்படுத்தப்பட்டால் வீதிவிபத்துக்களும் குறையும்.

இவ்வாறு நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்தார்.

# மிருசுவில்வரையே கடைசி பஸ் உசன் மக்களுக்கு பெரும்சிரமம்!

தென்மராட்சி, ஜூலை, 20

யாழ்ப்பாணத்திலிருந்து இரவில் தென்மராட்சி செல்லும் கடைசி பஸ் மிருசுவிலுடன் நிறுத்தப்படுவதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறப்படுகிறது.

முன்னர் யாழ். பஸ் நிலையத்திலிருந்து இரவு கடைசி சேவையாக புறப்படும் 769 தட இலக்க பஸ் பேருந்து உசன்வரை நடத்தப்பட்டது.

அண்மையில் ஏற்பட்ட அசாதாரண நிலையினால் இந்த பஸ் சேவை மிருசுவில் சந்தியுடன் நிறுத்தப்பட்டு கொடிகாமத்தில் இரவுத் தங்கலுக்கு நிறுத்தப்படுகிறது.

இதனால் கடைசி பஸ்ஸில் பயணம் செய்யும் உசன், விடத்தற்பளை, கெற்பேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இரவு வேளையில் பயபீதியுடன் இரண்டு மைல்களுக்கு மேல் நடந்து செல்கின்றனர்.

தற்போது மிருசுவில் சந்தியுடன் நிறுத்தப்படும் பஸ் சேவையினை உசன் இராமநாதன் வித்தியாலயம் வரை நடத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இப்பிரதேச மக்கள் வட பிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளரைக் கேட்டுள்ளனர். (117)

# வாசகர் திருமுகம்

## இந்திய சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள் வன்முறைகளைப் பரப்புகின்றன

இன்றைய கலாசாரச் சீரழிவுக்கு இந்தியத் தமிழ் திரைப்படங்களும், தொலைக்காட்சி நாடகங்களும் முக்கிய காரணங்கள் என்பதே பலரதும் கருத்தாகும்.

வேலைவெட்டி இல்லாமல் இருந்துகொண்டு மோட்டர் சைக்கிளை வைத்துக்கொண்டு ஒரு கையில் சிகரட்டும், மற்றொரு கையில் கைத்தொலைபேசியுமாக அடாவடித்தனங்கள் புரிவதும் பெண்களோடு சேட்டை விடுவதும், களவுகளிலும் அடிதடிகளிலும் கொலைகளிலும் ஈடுபடுவது எல்லாம் இந்த சினிமாவினால் வந்த வினை. தொலைக்காட்சி நாடகங்கள் எதைப் போதிக்கின்றன? எப்படி அடுத்தவனைக் கெடுப்பது, குடும்பத்தைக் கெடுப்பது, சகோதரர்களுக்குள் பகையைக் கொண்டு வருவது, நண்பரைக் கெடுப்பது, கூடிக் குலாவி குடித்துக்கும்மாளம் அடிப்பது, பெண்களைக் கெடுப்பது போன்ற வேலைகள் என்று தெரியாதவர்களுக்கும் காட்டிக்கொடுப்பதுதான் இவற்றின் வேலை.

முன்பெல்லாம் கதாநாயகர்கள் நல்லவர்கள். வில்லன்கள் கெட்டவர்கள். இப்போதெல்லாம் அநேகமான சினிமாக்களில் கதாநாயகர்களே அட்டூழியம் செய்பவர்கள். அவர்களின் உடையும் போக்கும் நடத்தையும் பண்பும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. தாமும் அவர்களாக எண்ணிக் கொண்டு செயல்படும் நம் இளைஞர்கள் எப்படி உருப்படுவார்கள்?

அன்னம் போல் பாலை மட்டும் அருந்தி விட்டு நீரை விட்டுவிடுவதுதானே என்ற வேதாந்தம் நடைமுறைக்கு ஒத்துவராது.

இவை எல்லாம் ஒரு புறமிருக்க, அண்மைக் காலமாக இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமாக தமிழர் ஆதரவுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் பல தமிழகத்தில் நடத்தப்பட்ட போதெல்லாம் கலை உலகம் வெறுமனே வேடிக்கை பார்த்ததாகத்தான் அறிவோமே ஒழிய யாராவது பங்கு கொண்டதாக சான்றுகள் இல்லை. சினிமா கதாநாயகர்கள் , நாயகிகள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் சினிமாத்துறை சம்பந்தப்பட்டவர்கள் பேட்டி கொடுக்கும் போதுமட்டும் ஒரு சில வரிகளைச் சொல்லி விட்டு கம்மென்று இருந்துவிடுவார்கள். இந்த நிலையில் தமிழ் சினிமா பார்ப்பதும், பாடல்கள் கேட்பதும், தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதுமாக இருக்கத்தான் வேண்டுமா? புறக்கணிப்போமே ஒட்டுமொத்தமாக.

*சமுதாய நலனுக்காக*

**யாழ்ப்பாணம்.** **க.நாதன்.**

## நிழல் கொட்டகை அமைக்கப்படுமா?

தென்மராட்சியில் கல்வியின் விருட்சமாக விளங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி கற்கிறார்கள். இவர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பல்வேறு பகுதிகளில் இருந்து பஸ்களில் வருபவர்கள் ஆவர். ஆனால் கல்லூரி அருகே பஸ் தரிப்பிட நிழல் கொட்டகை இல்லாதது பெரும் இன்னல்களை ஏற்படுத்தி உள்ளது. முன்னர் இந்துக் கல்லூரிக்கு அருகில் இருந்த பஸ் தரிப்பு நிழல் குடை 2000 ஆம் ஆண்டு யுத்த நடவடிக்கையின் போது முற்றாக அழித்தொழிக்கப்பட்டது. யுத்தம் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு நான்கு வருடங்கள் கடக்கும் நிலையிலும் இன்னும் இவ்விடத்தில் பஸ் தரிப்பிட நிழல் கொட்டகை கட்டப்படவில்லை.

இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது சமூக சேவையாளர்களோ கருத்தில் கொள்ளாது பாராமுகமாக இருப்பது பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. வெயில் காலத்திலும் மழை காலத்திலும் பெரும் இன்னல்களை மாணவர்கள் எதிர்நோக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இனியாவது காலத்தை கடத்தாது மாணவர்களின் நன்மை கருதி பஸ்தரிப்பிடத்தில் நிழல் கொட்டகை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

**சாவகச்சேரி.** **ந.பிரசாந்தன்.**

## கட்டாக்காலி ஆடுகளால் தொல்லைகள் அநேகம்

நல்லூர்சட்டநாதர் வீதியில் தினமும் 25-30 ஆடுகள் குட்டிகளோடு கட்டாக்காலிகளாக அலைகின்றன. இவை தொண்டலடி வைரவர் ஆலய கிழக்கு வீதியில் முகாமிட்டு வெளிவீதி, உள்வீதி, முன்மண்டபம் இவ்விடங்களை அசுத்தம் செய்கின்றன.

சட்டநாதர் வீதியில் படலை திறந்திருக்கும் வீடுகளுக்குள் புகுந்து செடி கொடிகளை கடித்து அழிக்கின்றன. இவை கூட்டமாக சட்டநாதர் வீதியில் நிற்பதால் மோட்டார் சைக்கிள், ஓட்டோக்கள், சைக்கிள்கள் போன்றவற்றில் சட்டநாதர் வீதியில் செல்வது மிகவும் கஷ்டமாகும். இதனால் பல வீதி விபத்துகள் ஏற்பட்டு பலர் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இதைப் பற்றிக் கவனிப்பார் யாருமில்லை.

இவ்விடயத்தில் மாநகரசபை ஆணையாளர் தீர்க்கமான முடிவை எடுத்து போக்குவரத்து பொலீஸாரோடு கலந்தாலோசித்து ஒரு திட்டத்தின் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்தி சட்டநாதர் வீதியில் வசிப்பவர்களுக்கும், மக்களுக்கும் உதவிசெய்யும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**கல்வியங்காடு.** **விபத்தில் பாதிக்கப்பட்டவர்.**

## தமிழீழ சுகாதார சேவையினருக்கு....

ஆலயங்களில் பேணவேண்டிய சுகாதார முறைகள் குறித்து தமிழீழ சுகாதார சேவை விடுத்த விதிமுறையில் காவடிக்குப் பயன்படுத்தும் செடில் ஊசியை ஒருவருக்குப் பயன்படுத்தியபின் அதனை வீசிவிடும்படியும் மற்றவருக்குப் புதியசெடியைப் பாவிக்குப்படி கூறியுள்ளமை காலத்தின் தேவைகருதி எடுக்கப்பட்ட ஒரு தூரநோக்கான சிந்தனை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இது வரவேற்கத்தக்கவிடயம். இதேபோல் சிகை அலங்கரிப்பு நிலையங்களில் ஒருவருக்கு ஒரு சவர அலகைப் பயன்படுத்தும் படி அறிவுறுத்தல் விடுவது இன்றைய காலத்தின் தேவையாகும். இதனை தமிழீழ சுகாதார துறை கவனத்தில் எடுப்பார்களா?

**பருத்தித்துறை.** **இ.கார்த்திகேயன்.**

# அடையாள அட்டை விநியோகம் மாவட்ட மட்டத்தில் விஸ்தரிப்பு

## அடுத்த ஆண்டு தொடக்கம் திட்டம் நடைமுறைக்கு

கொழும்பு,ஜூலை20

ஆள் பதிவுத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அடுத்த ஆண்டு தொடக்கம் மாவட்ட மட்டத்தில் விரிவாக்கப்படவுள்ளன என்று திணைக்களத்தின் ஆணையாளர் ஏச்.பீ.தர்மதாச கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இதன்படி தேசிய அடையாள அட்டை விநியோகம் தொடர்பான சகல செயற்பாடுகளும் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதற்கு வசதியாக சகல மாவட்ட அலுவலகங்களுக்கும் பிரதி ஆணையாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

தேசிய அடையாள அட்டைகளை எதுவித தாமதமுமின்றி பொதுமக்கள் பெறுவதற்கு இதனால் வழியேற்படும். இந்த மாவட்ட அலுவலகங்களின் சகல செயற்பாடுகளும் கணனி மயப்படுத்தப்படவுள்ளன.

மாதமொன்றுக்கு சுமார் ஒரு லட்சம் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன. மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டதன் பின்னர் நாளொன்றுக்கு சுமார் 15 ஆயிரம் அடையாள அட்டைகள் விநியோகிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு ஆள்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் அவசியம் அதிகரித்துள்ளதால் அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பிப்போர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (206)

### தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம் (பளை)

வழ/இலக்கம் :-331/05
தன்மை :- காணி

வழக்காளி
செல்லர் தவஞானம்
இல.21. பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

எதிராளிகள்
01.சிவனேசன் குகனேசன்
02.குகனேசன் பெண் கவிதா
03.நடேசன் ஜெயசீலன்
சில்வா வீதி
(மூவரும், உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

மேற்படி எதிராளிகளுக்கு:

**அறிவித்தல்**

வழக்காளியால் எதிராளிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் எதிராளிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு மன்றுக்குத் தோன்றி பின் தொடர்ச்சியாக மன்றுக்கு சமுகம் அளிக்காமையினால் ஒருமுக விளக்கம் நடைபெற்று இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் இவ் இடைக்கால தீர்வை இத்துடன் பிரசுரிக்கப்படுகின்றது. இவ் இடைக்கால தீர்வை பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து 21 நாள்களுக்குள் எதிராளிகளோ அல்லது அக்கறை உடையோரோ மன்றில் தோன்றி ஏதாவது ஆட்சேபனை, மறுப்புக்கோரிக்கை இருப்பின் தெரிவிக்குமாறும் தவறின் இவ் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

"நீதிமன்ற கட்டளைப்படி"
2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் நாள்

பொ.சுப்பிரமணியம்
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
யாழ்ப்பாணம் (பளை).

வரைவு:-சூ.அச்சுதன்
வழக்காளி,
சட்டவாளர். (சி.50290)
(26.21.19.17)

### தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம் (பளை)

வழ/இலக்கம் :-331/05
தன்மை :- காணி

வழக்காளி
செல்லர் தவஞானம்
இல.21, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

எதிராளி
01.சிவனேசன் குகனேசன்
02.குகனேசன் பெண் கவிதா
03.நடேசன் ஜெயசீலன்
சில்வா வீதி,
(மூவரும்)உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

**இடைக்காலத்தீர்வை**

இவ்வழக்கு 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் நாள் யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதியாளர் திரு.சி.மணியரசன் முன்னிலையில் எடுக்கப் பட்ட போது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டவாளர் திரு.சூ.அச்சுதன் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிகள் தொடர்ந்து மன்றில் தோன்றாததன் அடிப்படையில் ஒரு முகவிளக்கத்திற்கு எடுக்கப் பட்டு வழக்காளியின வழக்கு அறிக்கை வ-1, வ-2 ஆவணங்கள் வழக்காளி மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து பரிசீலித்து வழக்காளி தனது ஆதனத்தில் சுதந்திரமாக ஆட்சி செய்வதை எதிராளிகள் எவ்விதத்திலும் தடை செய்யக்கூடாது என்றும் இவ் ஆதனம் வழக்காளிக்கே சொந்தமுடையது என்றும் வழக்காளியால் செய்யப்பட்ட திருத்தங்களை எதிராளிகள் அழித்தமையால் வழக்காளிக்கு ஏற்பட்ட இழப்பீடாக ஒருலட்சம் ரூபா (100, 000) பணத்தை எதிராளிகள் செலுத்த வேண்டும் என்றும் வழக்குச் செலவுடன் வழக்காளியின் உரிமைக் கோரிக்கைக்கு அமைவாக இடைக்கால கட்டளை இட்டுத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் நாள்"

ந.மதன்
நீதியாளர், தமிழீழ மாவட்ட
நீதிமன்று, யாழ். (பளை).

வரைவு:-சூ.அச்சுதன்
வழக்காளி,
சட்டவாளர். (சி.50291)
(39.21.19.17)




## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

20 - 07 - 2006

"அம்பாள் அகம்"
சரசாலை
மத்தியைச் சேர்ந்த
விசாகன்-ஜெயகௌரி
தம்பதியரின்
தவப்புதல்வி
**செல்வி சயந்தவி**
(சஞ்சிகா)
இன்று (20.07.2006) வியாழக்கிழமை
தனது மூன்றாவது பிறந்ததினத்தை தம்பி
பபியுடனும் தங்கை மாதங்கியுடனும்
கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அம்மா, மாமா, அத்தை,
பெரியம்மா, சித்தப்பா (காந்தி),
சித்தி (ஞானம்), மச்சி, அத்தான்மார்
ஆகியோர்
பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்
அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
இ.யோகாநந்தன்
(மாமா - பிரான்ஸ்).

செல்வி சயந்தவி

(52348) (39)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வல்வை சிவகுரு வித்தியாலய அதிபராக
கடமையாற்றி மருதங்கேணி கோட்டக்கல்வி
அதிகாரியாக பதவியுயர்வு பெற்ற
அல்வாய் ஊரைச் சேர்ந்த

### திரு.த.தவேந்திரராசா

(B.Com., B.Phil, PGDE, SLPS - I)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல
உயர்வுகள் பெற்று நீடு வாழ இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

'தெய்வீகம்'
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய். (52380)(21.19.17)

மா.அனந்தராசன் குடும்பம்,
சு.வரதவேல் குடும்பம்.

### பாடசாலைகளுக்கு பந்துகள் அன்பளிப்பு

வடமராட்சி,ஜூலை20

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிப் பிரதேசத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இரு பாடசாலைகளுக்கு பந்துகளை வழங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே பந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இப் பந்துகளை பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் சார்பாக வழங்கினார். (173)

### பருத்தித்துறை மருத்துவமனையில் பற்சிகிச்சைப் பிரிவு நவீனமயம்

வடமராட்சி,ஜூலை20

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் நவீனமயப்படுத்தப்பட்டுவரும் பற்சிகிச்சைப் பிரிவின் வேலைகள் யாவும் இன்னும் இருவாரங்களுக்குள் பூர்த்தியடைந்துவிடும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது எக்ஸ்றே கதிரியக்கப் பிரிவுக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் பற்சிகிச்சைப்பிரிவு திருத்தவேலைகள் முடிவுற்றதும் அந்த இடத்துக்கு மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (173)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
11
-
02
-
1953



விண்ணில்
11
-
08
-
2004

அமரர்

### பாக்கியலெட்சுமி அன்னலிங்கம்

திதி: ஏகாதசி

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களைப் பிரிந்து ஆண்டு இரண்டானாலும்
ஆறாது எங்கள் துயரம்
அணையாது உங்கள் நினைவு
ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமகள், பேரன்.

44, 3ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை.
(52382)(21.17.19)


## நிதி ஒதுக்கீடு

நல்லூர், ஜூன் 20

வேலணை பிரதேச சபையின் அல்லைப்பிட்டி உப அலுவலகத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக பிரமாண அடிப்படை மூலதன நன்கொடையாக ரூபா 3 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (111)

## முதலாமாண்டு நினைவஞ்சலி

மலர்வு
19
-
05
-
1908



உதிர்வு
21
-
07
-
2005

### திருமதி மரியம்மா செபஸ்தியாம்பிள்ளை

*(வல்வெட்டித்துறை)*

இறைவா!

இம் மண்ணக வாழ்வின் முடிவில் விண்ணக வாழ்வு இருக்கிறது என்று விசுவாசித்த உம் அடியாளுக்கு என்றும் நிறைவான இரக்கத்தைப் பொழிந்தருளும். உமது வான்வீட்டில் நித்திய இளைப்பாற்றியை அவவுக்குக் கொடுத்தருளும் - ஆமேன்

*அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நாளை(21.07.2006) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு செபிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

நன்றியுடன் நினைவுகூரும்:
செ.அ.இராசசிங்கம் (கொழும்பு),
செ.பே.குணசிங்கம் (மட்டக்களப்பு),
செ.அ.இரத்தினசிங்கம்,
மற்றும் குடும்பத்தினர்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.
(522389)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பல்கலைக்கழக மாணவர்களுக்கான

### தங்குமிட வசதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு வீட்டை அல்லது அறைகளை வாடகைக்கு கொடுக்க விருப்பமுள்ளோர் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய விவரங்களை உதவிப்பதிவாளர் - நலச் சேவைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

வீட்டு உரிமையாளர் பெயர்:
வீட்டு உரிமையாளரின் முகவரி:
தொலைபேசி இலக்கம்:
வழங்கப்படவிருக்கும் வீட்டின் முகவரி:
அறைகளின் எண்ணிக்கை:
உணவு வழங்கும் வசதி: உண்டு/இல்லை
வதிவிடம் வழங்கவுள்ள விருப்பு:
ஆண்களுக்கு/பெண்களுக்கு

வாடகை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

17.07.2006 - பதிவாளர்
(சி-50289)(21.19.17)

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் மார்க்குஸ் அகிலன்



கரம்பொன் தெற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் மார்க்குஸ் அகிலன் 17.07.2006 அன்று கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் செல்வநாயகம் - ஸ்ரெலா தம்பதியரின் அன்பு மகனும் அனற்மரீடா (ஆசிரியை, யா/புனித யோண் பொஸ்கோ வித்தியாலயம்), குமார் (லண்டன்), அலெக்ஸ், ஜெனிற்றா, கெனடி, றொபிற்றா ஆகியோரின் சகோதரனும் றொபினின் (மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழகம்) மைத்துனரும் வளன் விசோக்கின் மாமனாரும் பத்திநாதர், காலஞ்சென்ற பற்றிமா பத்திநாதர் ஆகியோரின் பெறாமகனும் வேளா, கிளாறா, விக்ரோரியா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நல்லடக்க ஆராதனைக்காக இன்று (20.07.2006) வியாழக்கிழமை காலை 9மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
- குடும்பத்தினர்.

42, சோமசுந்தரம் அவனியூ,
யாழ்ப்பாணம். (52384)(21.19.17)

# ஹிஸ்புல்லா நிலைகளைத் தகர்க்க இஸ்ரேலியர் லெபனானுக்குள் பிரவேசம்

## அமைதியை உருவாக்க ராஜதந்திர முயற்சிகள் மும்முரம்

பெய்ரூட்,ஜூலை20

ஹிஸ்புல்லா வெளிப்புற நிலைகளைத் தகர்க்கும் நோக்குடன் இஸ்ரேலிய தரைப்படை அணிகள் தென்லெபனானுக்குள் நுழைந்துள்ளன என்று இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளின் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். படைகள் எல்லையின் அருகில் நிற்பதாக அவர் கூறினார். அதற்கு மேல் விவரம் ஏதும் கூறமறுத்துவிட்டார்.

அதற்கு சிலமணிநேரத்துக்கு முன்னர் இஸ்ரேலிய விமானங்கள் லெபனான் தலைநகரின் தெற்குப் புறநகர் பகுதியில் விமான நிலையத்துக்கருகிலுள்ள இடங்களை குண்டுகளால் தகர்த்தன. இரவுவேளை பகல் போல் காட்சியளித்தது. கடைசியாக இஸ்ரேலிய தாக்குதலில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்ற விவரம் உடனடியாகத் தெரியாவிட்டாலும் ஒரு டசின் பொதுமக்கள் இஸ்ரேலிலும் லெபனானிலும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இராணுவ நிலையொன்றின் மீது இஸ்ரேலியர் நடத்திய விமானக்குண்டுத் தாக்குதல் ஒன் றில் பதினொரு லெபனான் போர் வீரர்கள் கொல்லப்பட்டனர். ஹிஸ்புல்லா ரொக்கட் தாக்குதலில் வட இஸ்ரேலில் இஸ்ரேலியர் ஒருவர் கொல்லப்பட்டார். கடந்த வியாழனிலிருந்து ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் 750 ரொக்கட்டுகளை இஸரேல் பகுதிக்குள் வீசியுள்ளனர். கடந்த புதனன்று வட இஸ்ரேல் பகுதியில் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இராணுவ நிலையொன்றின் மீது தாக்குதல் நடத்தி மூன்று பேரைக்கொன்று இரு படையினரைக் கடத்திச்சென்றுள்ளனர். அதேவேளை கடந்த புதன்கிழமை இஸ்ரேலிய டாங்கிப் படைகள் மத்திய காஸாவுக்குள் நுழைந்ததாக இஸ்ரேலிய பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்தனர்.

அடிபாடுகள் ஆரம்பமானது முதல் இஸ்ரேலிய சிவிலியன்கள் 13 பேருடன் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர் லெபனானில் 83 பேர் கொல்லப்பட்டும் 456 பேர் காயமுற்றுமிருப்பதாக உள்நாட்டு பாதுகாப்புப் படைத் தரப்பினர் தெரிவித்தனீர்.

இஸ்ரேலிய தாக்குதல்களினால் தமது போர் முனைப்பு குறைந்துவிடவில்லையென்றும் மரண பரியந்தம் வரை தாங்கள் போராடப் போவதாகவும் ஹிஸ்புல்லா அமைப்பினர் அறிவித்துள்ளனர்.



யுத்தம் மூண்டுள்ள லெபனானில் வெளி நாடுகள் தமது பிரஜைகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளன.

மக்களை அப்புறப்படுத்துவதில் உதவுவதற்காக நடுநிலத்தரைக் கடல் பகுதிக்கு இவோ ஜிமா என்ற அமெரிக்க கப்பல் செங்கடலில் இருந்து புறப்பட்டுள்ளது என்று பென்ரகன் அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

ராஜாங்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் அம்மையார் வாஷிங்டனில் எகிப்திய வெளிநாட்டமைச்சர் அகமத் அப்துல் கீட்டுடன் அவசர ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

'அடிபாடுகள் நிறுத்தப்படவேண்டும் என்றே நாங்கள் எல்லாரும் விரும்புகின்றோம். சிவிலியன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்று நாங்கள் எல்லாரும் விரும்புகின்றோம்' என்று கூறினார்.

இதேவேளை இன்னொரு ராஜதந்திர முயற்சியாக ஐ.நா. விசேட பிரதிநிதி வி.ஜே.நம்பியார் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவை ஜெருசலெத்தில் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் திஸிப் லிவினி சந்தித்து பேச்சு நடத்தினார்.

## கார்க்குண்டுவெடிப்பில் ஈராக்கில் 27 பேர் பலி

ஈராக்,ஜூலை20

ஈராக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார் குண்டுவெடிப்பில் 27 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். 12 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கில் ஷியா பிரிவினரின் புனித நகரமான கு..பாவில் மசூதி அருகிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளத.

வீதியில் கூட்டியிருந்த கூட்டத்தின் நடுவில் திடீரென புகுந்த கார் வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

## மும்பை குண்டு வெடிப்பு: ஈ-மெயில் அனுப்பிய மாணவன் கைது

மும்பை குண்டு வெடிப்பற்கு பொறுப்பேற்று தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்கு ஈ-மெயில் அனுப்பிய மாணவன் கைது செய்யப்பட் டுள்ளான். மும்பையில் நடந்த குண்டு வெடிப்பிற்கு பொறுப்பேற்று லஸ்கர் இகோகார் என்ற பெயரில் ஈ-மெயில் ஒன்று வந்தது. இந்த ஈ-மெயில் மத்திய பிரதேசம் இந்தூரில் இருந்துதான் அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் அந்த இயக்கத்தை சேர்ந்த 16 பேர்தான் இந்த குண்டுவெடிப்பை நடத்தியதாகவும் அதில் அந்த இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரும் இறந்திருக்கிறார் என்றும், இன்னும் சில இடங்களில் இது போன்ற குண்டு வெடிப்பை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஈ-மெயில் எங்கிருந்து வந்தது என பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். இது தொடர்பாக போபாலில் 12ம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான். அவனிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (202)

## இஸ்ரேல் விமானத்தாக்குதலில் லெபனானில் நேற்று 47 பேர் பலி!

பெய்ரூட்,ஜூலை20

லெபனான் மீது நேற்று இஸ்ரேல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தியதில் 47 பேர் பலியானார்கள். இஸ்ரேல் ராணுவத்தினர் 2 பேரை லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கடத்திச் சென்றதையடுத்து இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. ஹிஸ்புல்லா தீவிரவாதிகளும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி பதிலடி கொடுத்து வருகின்றனர். இதில் பலர் உயிரிழந்துள்ளனர். நேற்று 47 பேர் பலியாகியுள்ளனர். இதனால் இஸ்ரேல், லெபனான் இடையே போர் மோகம் நிலவுவதால் அங்குள்ள வெளிநாட்டவர்களை அந்தந்த நாடுகள் திரும்ப அழைத்து வருகின்றன.

லெபனான் மீது இஸ்ரேல் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது. அங்குள்ள பல்வேறு நாட்டினரை அந்தந்த நாடுகள் மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் லெபனானில் உள்ள 12 ஆயிரம் இந்தியர்களை மீட்க இந்தியா 4 போர்க்கப்பல்களை அனுப்பியுள்ளது. மேலும் தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து லெபனானில் பணி புரியச் சென்ற 26 தொழிலாளர்களை மீட்கக் கோரியும் தூத்துக்குடியிலுள்ள அவர்களின் உறவினர்கள் அரசஅதிபரிடம் மனுகொடுத்துள்ளனர்.

லெபனானில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் போர்நிறுத்தம் செய்ய சர்வதேச நாடுகளின் உதவியை நாட முடிவு செய்யப்பட்டுள்ளது.

## லெபனானிலுள்ள இந்தியருக்குப் பாதுகாப்புத் தேவை-விஜயகாந்த்

சென்னை,ஜூலை20

இஸ்ரேல் தாக்குதல் பிடியில் சிக்கியுள்ள லெபனானில் உள்ள இந்தியர்களைப் பாதுகாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தேசிய முற்போக்கு திராவிடக் கழகத் தலைவர் விஜயகாந்த் கோரியுள்ளார்.

இது குறித்து வெளியுறவுத்துறை இணை அமைச்சர் இ.அகமதுக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

பெய்ரூட்டில் உள்ள பல இடங்களில் தமிழ்நாடு உட்பட தென் மாநிலத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் சிக்கியுள்ளனர்.

அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கடிதத்தில் கேட்டுள்ளார் விஜயகாந்த். (202)

## பேரழிவுகளுக்கு எண் 8 காரணமா?

இயற்கைப் பேரழிவுகள் நடந்த திகதிகளை வைத்து ஜோதிடர்கள் கணித்ததில் முக்கியமான அழிவுகள் '8' எண் கூட்டுத்தொகை வரும் நாள்களில் நடந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி குஜராத் மாநிலத்தில் மிகப் பெரிய பூகம்பம் ஏற்பட்டு இலட்சக்கணக்கானோர் பலியானார்கள்.

இந்தோனேசியாவில் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுனாமி பேரலைகள் தாக்கி லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இதேபோல் காஷ்மீரில் 2005 ஆம் ஆண்டு அக்டோபர் 8ஆம் திகதி மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

மும்பையில் கடந்த 2005ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி வரலாறு காணாத வெள்ளச்சேதம் ஏற்பட்டது. இதில் பலர் பலியானார்கள். இந்த பேரழிவு ஏற்பட்ட திகதி 26.

தற்போது கடந்த 17ஆம் திகதி மீண்டும் இந்தோனேசியாவின் ஜாவா தீவுப் பகுதியில் சுனாமி தாக்கி நூற்றுக் கணக்கானோர் பலியாகிவிட்டனர். இந்தப் பேரழிவு நடந்த திகதியும் எண் 8 கூட்டுத் தொகையில் வருகிறது.

எண் '8' கூட்டுத்தொகை வரும் நாள்களில் பேரழிவுகள் நடந்து இருப்பது ஜோதிடர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவை எல்லாவற்றையும் விட இந்த ஆண்டு 2006. இதன் கூட்டுத் தொகை 8 வருவதால் இந்த ஆண்டு முழுவதும் இயற்கை சீற்றங்கள் அதிக அளவில் நடைபெறுவதாகவும் ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர். (202)

## மும்பை தொடர் குண்டுவெடிப்புகள்; விசாரணைக்கு உதவ பாக்.தயாராம்

இஸ்லாமபாத்,ஜூலை20

மும்பை குண்டுவெடிப்புடன் தொடர்புடைய தீவிரவாதிகள் பற்றிய உறுதியான தகவலை இந்தியா வைத்திருந்தால் விசாரணையில் உதவுவதற்கு பாகிஸ்தான் தயாராகவுள்ளது.

இவ்வாறு உறுதியளித்துள்ளார் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்.

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புச் சபையில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் அமைதி ஏற்படுத்தக் கிடைத்துள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பை நழுவவிட்டுவிடக் கூடாது. பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளால் அமைதி முயற்சி பாதித்துவிடக்கூடாது இந்தியாவிடமிருந்து உறுதியான தகவல்கள் கிடைத்தால் விசாரணைக்கு உதவத் தயாராக இருக்கின்றோம்- என்றார். (202)

## இந்த ஆண்டின் முற்பகுதியில் மட்டும் ஈராக்கில் 14 ஆயிரம் பேர் கொலை

இந்த ஆண்டின் முதல் அரையாண்டில் மட்டும் 14ஆயிரம் பொதுமக்கள் ஈராக்கில் கொல்லப்பட்டுள்ளனர். ஐ.நா.அறிக்கையொன்றில் இந்த விவரம் தரப்பட்டுள்ளது. கொலை, ஆள்கடத்தல், சித்திரவதை ஆகியவை தொடர்ந்தும் பரவலாக இடம்பெற்று வருகின்றனவென்று அவ்வறிக்கை கூறுகின்றது.

சிவிலியன் கொலைகள் என்பது உயர்ந்து செல்லும் போக்கிலுள்ளது. 5,800 பேர் கொலையுண்டதும் 5,750 பேர் காயமுற்றதும் கடந்த மே, ஜூன் மாதங்களில் மாத்திரம் அறிவிக்கப்பட்டுள்ளன.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், மசூதிகள் மீதான தாக்குதல்கள், தொழிலாளர் மீதான தாக்குதல்கள் மற்றும் இறந்தவர்களின் சடலங்களைக் கண்டுபிடித்தமை, நீதிவான்கள் கொலை, கைதிகள் கொலை, குருமார்கள் குறிவைக்கப்பட்டமை போன்றவற்றின் விவரங்களை உள்ளடக்கியதாய் இந்த ஐ.நா. அறிக்கை காணப்படுகின்றது.

ஈராக் தொடர்பான ஐ.நா. உதவி அமைப்பு மாதம் இருதடவை வெளியிடவும் இந்த அறிக்கையில் பக்தாத்தில் சமய ரீதியிலான நடைமுறைகளைக் கைக்கொள்ளும்படி வற்புறுத்தப்படுவது பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளன. மே மாதம் 28ஆம் திகதி ஈராக்கிய டென்னிஸ் பயிற்சியாளர் ஒருவரும் அவருடன் கூடிய இரு விளையாட்டு வீரர்களும் அரைக்கால் சட்டைகள் அணிந்திருந்தமைக்காக சுட்டுக்கொல்லப்பட்டனர். இதேபோல் ஆண்களின் தலைமுடிகள் மற்றும் முகதாடி மீசைகள் எவ் வாறு அமைந்திருக்க வேண்டும் என்பது பற்றி யும் அறிவுறுத்தப்படுகின்றது.

- இவ்வாறு தெரிவித்துள்ளது அந்த அறிக்கை . (ப)

# இந்திய - அமெரிக்க அணுசக்தி உடன்பாட்டில் புதிய நிபந்தனைகளுக்கு இடமே இல்லை

## திட்டவட்டமாகக் கூறுகின்றார் மன்மோகன் சிங்

புதுடில்லி,ஜூலை20

இந்தியா-அமெரிக்கா இடையிலான அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாட்டில் புதிய நிபந்தனைகளை அமெரிக்கா விதிக்கவுள்ளது. ஆனால், இந்த நிபந்தனைகள் எதனையும் ஏற்கும் பேச்சுக்கே இடமில்லை என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இந்தியாவின் கவலைகளை அமெரிக்கா முழுமையாகக் கவனத்தில் கொள்ளும். கடந்த ஆண்டு ஜூலையில் இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்துக்கு உட்பட்டு புதிய சட்டத்தை அமெரிக்கா இயற்றும் - என்றும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆக்கப்பணிகளுக்கான அணுமின் நிலையங்கள், இராணுவப் பணிகளுக்கான அணுமின் நிலையங்கள் என நாட்டில் உள்ள அணுமின் நிலையங்களை வகைப்படுத்த 2005, ஜூலை உடன்பாட்டில் ஒப்புக்கொண்டுள்ளோம். அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், இந்தியாவுக்கு வந்திருந்தபோது, ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் இடம்பெற்றுள்ள விதிமுறைகளுக்கு ஏற்பவே அமெரிக்கச் சட்டம் இயற்றப்படவேண்டும்.

அந்த உடன்பாட்டில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத எந்தப் புதிய நிபந்தனையையும் நாம் ஏற்கமுடியாது. நமது கருத்துக்களை அமெரிக்காவிடம் தெரிவித்துவிட்டோம். எனினும், அந்தப் பிரச்சினையை ஊதிப் பெரிதாக்கிவிடக் கூடாது; ஏனென்றால், நமது கருத்ததுகளையும் கவலைகளையும் அமெரிக்க அரசியல் தலைவர்கள் அறிந்துள்ளனர். அவை கவனத்தில் கொள்ளப்படும் என்ற நம்பிக்கையுள்ளது - என்றார் மன்மோகன் சிங். (202)

# ஊடகவியலாளர் படுகொலைகளை விசாரிப்பதில் பொலீஸார் அசமந்தம்

**தேசிய பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான செய்திகளை எழுதி வந்த சுதந்திர ஊடகவியலாளர் சம்பத் லக்மால் அண்மையில் படுகொலை செய்யப்பட்டமை வாசகர்கள் அறிந்ததொன்றே. அப்படுகொலை தொடர்பான விசாரணைகள் பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், இதுவரை காலமும் இடம்பெற்ற எந்தவொரு ஊடகவியலாளரது படுகொலையிலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்துவதில் பொலீஸார் அசிரத்தையே காட்டி வந்துள்ளனர் என்கிறார் கட்டுரையாளர் சீ.ஜே.அமரதுங்க.**

**'லங்காதீப' ஞாயிறு இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் கீழே தரப்படுகின்றது.**

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவது இன்று இந்நாட்டில் சர்வசாதாரணமாகிவிட்டது. அத்தகைய படுகொலைகள் இடம்பெறும் வேளைகளில் அவற்றைக் கண்டித்து பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியிடப்படுவதும், ஆர்ப்பாட்டங்கள் மூலமாகக் கண்டனம் தெரிவிப்பதும் வழக்கமாகி விட்டதோடு, சில தினங்களில் அந்தச் சம்பவம் மறக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது. சில நாள்களுக் குப் பின்னர் அத்தகைய படுகொலை மீண்டும் இடம்பெறும் சமயம், மீண்டுமொரு தடவை அத்தகைய கண்டனங்கள் வெளி யிடப்படுவதும் வழக்கமாகிவிட்டது.

இத்தகைய படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான பொலீஸாரின் நடவடிக்கைகள் மேற்சொன்ன வகையிலமைவனவே. ஊடகவியலாளரொருவர் படுகொலை செய்யப்படும் வேளையில் அது தொடர்பான விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் குறிப்பிட்ட அப் படுகொலை தொடர்பான முக்கிய தகவல்கள் தம்மால் பெறப்பட்டுள்ளகதாவும் பொலீஸார் தெரிவிக் கின்றனர். ஆனால், சில தினங்களில் அத்தகைய விசாரணைகள் யாவும் முற்றுமுழுதாகக் கிடப்பில் போடப்படுகின்றன. கடந்த இரு தசாப்த கால இடைவெளியில் 23 ஊடகவியலாளர்கள் நாட்டில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். எனினும், அப்படுகொலைகள் தொடர்பாக எவருக்கெதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப் படாததிலிருந்து பொலீஸாரின் செயற்பாடுகள் குறித்து தெளிவாக உணர முடிகிறது.

ஊடகவியலாளர் சம்பத் லக்மாலின் படுகொலை இவ்வாண்டில் நிகழ்ந்த அத்தகைய படுகொலைகளில் ஐந்தாவது ஆகும். இவ்வாண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி திருகோணமலையில் 'சுடர்ஒளி' பத்திரிகையின் செய்தியாளர் எஸ்.எஸ். ராஜன் படுகொலை செய்யப்பட்டமை, ஜனவரி 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தினக்குரல் பத்திரிகை விநியோகக் கடமையில் ஈடுபட்ட கே.நவரத்தினம் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் மே மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட் டமை ஆகியன இவ்வாண்டில் இடம்பெற்ற ஏனைய சம்பவங்களாகும்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளரான தர்மலிங்கம் சிவராம் படுகொலை செய்யப்பட்விசாரணைகளுக்கும் இதே விதமான முடிவே ஏற்பட்டன. 1980களின் நடுப்பகுதியில் பிரபல ஊடகவியலாளரான றிசட் டீ சொய்சா படுகொலை செய்யப்பட்டார். அந்தப் படுகொலை தொடர்பான குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்கான முக்கிய சாட்சிகள் இருந்த போதிலும் அது தொடர்பான விசாரணைகள் உரிய முறை யில்முன்னெடுக்கப்படவில்லை. அந்தப் படுகொலையின் பின்னணியில் அரசியல் சக்திகளின் தொடர்புகள் இருந்தமையே அதற்கான காரணம் ஆகும்.

1990களின் முற்பகுதியில் மற்றொரு ஊடகவியலாளரான ரோகண குமார படுகொலை செய்யப்பட்டார். அந்தப் படுகொலை தொடர்பான குற்றவாளி களைக் கண்டுபிடிக்க இயலாது போனமைக்கான காரணம் அந்தப் படு கொலை தொடர்பான விசாரணைகளுக்கு அரசியல் ரீதியான குறுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமையேயாகும். நியாயமான, பக்கச் சார்பற்ற வகையில் அப்படுகொலை தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றிருக்குமாயின் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தியிருக்க முடியும்.

பிரிட்டிஸ் ஒலிபரப்புச் சேவையுடன் தொடர்புடைய ஊடகவியலாளரான எம்.நிமலராஜன் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமை மற்றொரு பரபரப்பான சம்பவமாக அந்த வேளையில் கருதப்பட்டது. அந்தப் படுகொலைச் சம்பவம்கூட தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் கவனத்தை ஈர்த்ததொரு சம்பவமாகக் கரு தப்பட்ட போதிலும் அந்தப் படுகொலை தொடர்பான குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதில் இந்த நாட்டின் நீதியை நிலை நாட்டும் தரப்புகளால் வெற்றிபெற இயலவில்லை. இவை ஊடகவியலாளர்களது படுகொலைகள் தொடர்பான முக்கிய சம்பவங்கள் மட்டுமே. ஏனைய சம்பவங்கள் தொடர்பான நிலைமையும் இவற்றையொத்ததே.

இத்தகைய ஊடகவியலாளர்களது படுகொலைகளின் பின்னணி நாட்டில் இடம்பெறும் யுத்தத்துடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட் டவையாக இருப்பதே இவற்றின் விசேட அம்சமாகும். விசேடமாக நாட்டின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் வேறு ஆயுதம் தாங்கிய குழுக்களுக்குமிடையே இடம்பெறும் மோதல்கள் அண்மைக் காலத்தில் இத்தகைய படுகொலைகளுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

'சத்தின' என்ற சிங்களப் பத்திரிகைக்கும் வேறு சில பத்திரிகைகளுக்கும் பாதுகாப்பு விடயங்கள் தொடர் பான செய்திகளை சம்பத் லக்மால் வழங்கி வந்துள்ளார். பாதுகாப்புப் படைத்தரப்பு, வேறு அரசியல் கட்சிகள் மற்றும் ஆயுதம் தாங்கிய குழுக்கள் ஆகிய தரப்புகளிடமிருந்தே இத்தகைய பாதுகாப்புத் தொடர்பான செய்திகளைச் சேகரித்து சம்பத் லக்மால் பத்திரிகைகளுக்கு வழங்கி வந்துள்ளதோடு சில சமயம் விடுதலைப் புலிகளுடன் தாம் கொண்டிருந்த தொடர்பு மூலமாகவும் அவர் அத்தகைய செய்திகளைச் சேகரித்தார் எனவும் கூறப்படுகின்றது. அத்தகைய தொடர்பு காரணமாக அவருக்கு செய்திகள் கிடைத்தமை போன்றே, அதனூடாக யுத்த மோதல்கள் தொடர்பாகவும் அவர் தொடர்ச்சியாகத் தொடர்புபட்டிருந்தார் எனத் தோன்றுகிறது.

ஊடகவியலாளரான சம்பத் லக்மால் தேசிய பாதுகாப்பு தொடர்பாக அளவுக்கு மீறிச் செயற்பட்டுள்ளாரா என்பதே தற்போது எழுந்துள்ள வினாவாகும். எவ்வாறான போதிலும், இன்று இந்நாட்டில் இடம்பெற்றுவரும் யுத்தத்தின் நேரடித் தொடர்பு இப்படுகொலைக்கு உண்டென்பது தெளிவானதொன்றாகும்.

சம்பத் லக்மாலுக்கு குறிப்பிட்ட சில தரப்புகளிலிருந்து அச்சுறுத்தல் மேற்கொள்ளப்பட்டு வந்ததாக 'சத்தின' பத்திரிகையின் உதவி ஆசிரியர் தெரிவித்துள்ளார். பாதுகாப்புப் பிரிவுகள் தொடர்பான தகவல்களை அவர் வெளிப்படுத்தி வந்தமைக்காகவே அவருக்கு அத்தகைய அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

பாதுகாப்புப் படையினருக்கும் லக்கமாலுக்கும் இருந்து வந்த தொடர்பு, பாதுகாப்புப் படை உயரதிகாரியொருவரினால் கைத்தொலைபேசியொன்று லக்மாலுக்கு வழங்கப்பட்டிருந்த சம்பவத்தின் மூலம் தெளிவாகிறது. இராணுவத் தினருடன் இக் கைத்தொலைபேசி யூடாகவே லக்மால் தொடர்புகளைப் பேணி வந்துள்ளார். அவரது அந்தக் கைத்தொலைபேசியூடான கடைசித் தொடர்பு இராணுவ அதிகாரியொருவருடனேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆதலால் சம்பத் லக்மாலின் படுகொலைக்கும் இந்நாட்டில் இடம்பெற்று வரும் யுத்தத்துக்கும் நேரடிச் சம்பந்தம் உள்ளதாகக் கருதுவது சிரமமா னதல்ல. இதுவரை இடம்பெற்ற பொலீஸ் விசாரணைகள் மூலமும் இத் தகவல்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.



ஊடகவியலாளர் லக்மாலின்சடலம் கிடந்த இடத்தில் விசாரணை

**தமிழில்: வீயெஸ்ரீ**

எவ்வாறான போதிலும் சம்பத் லக்மால் என்ற ஊடகவியலாளர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அப்படுகொலை தொடர்பான பொலீஸாரின் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், இதற்கு முன்னரும் இடம்பெற்ற இத்தகைய விசாரணைகள் போன்று இதுகூட இடைநடுவில்நிறத்தப்படு வதற்கான வாய்ப்பு நிறையவே உள்ளது. அதாவது இந்தச் சம்பவத்தின் பின்னணி யில் இதுவரை இனங்காணப்படாத பிரபல சக்தியெதுவும் இருப்பதற்கான வாய்ப்பு உண்டு.

ஊடகவியலாளர்கள் படுகொலைச் சம்பவங்களில் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தத் தவறுவது அத்தகைய படுகொலைகளை ஊக்குவிப்பதாகக் கொள்ளத் தக்கது. எனவே, சம்பத் லக்மாலின் படுகொலை தொடர்பான சகல விடயங்களையும் வெளிப்படுத்தி நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு - இப்படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு - இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்குரியதாகும்.

யாழ்.செய்தியாளர்



ம.நிமலராஜன்

மட்டு.செய்தியாளர்



ஜி.நடேசன்

பிரபல.ஊடகவியலாளர்



டி.சிவராம்

திருமலைச் செய்தியாளர்



சு.சுகிர்தராஜன்

சுதந்திர ஊடகவியலாளர்



சம்பத் லக்மால்

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
வடிவேல், மனோரமா நடித்த
இம்சை அரசன் 23ஆம் புலிகேசி
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
(சி-47139)

## புதிய-ஜனநாயகக் கட்சியின் 28ஆவது ஆண்டு விழா

புதிய -ஜனநாயகக் கட்சியின் 28ஆவது ஆண்டு விழாக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி மு.ப 10 மணிக்கு ஹட்டன் நகரசபை மண்டபத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா தலைமையில் நடைபெறும். யுத்த நிறுத்தம்-பேச்சுவார்த்தை-அரசியல் தீர்வை வலியுறுத்தியும்- வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்தி குறைக்கக் கோரியும்- தோட்டத் தொழிலாளர்களுக்கு 350/= சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்பதை வற்புறுத்தியும்- மேற்படி ஆண்டு விழாக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் புதிய-ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் ஆண்டு விழா உரையினை நிகழ்த்துவார்.

மேலும் கட்சியின் மலையகப் பிரதேச செயலாளரும் வலப்பனைபிரதேசசபை உறுப்பினருமான ச.பன்னீர்ச்செல்வம், கல்வியாளர் சி.இராஜேந்திரன், பாட்டாளிவர்க்க புதிய தொழிற்சங்க செயலாளர் ம.சத்தியமூர்த்தி, கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ.தேவராசா, புதிய-மலையகம் வெ.மகேந்திரன், கல்வியாளர் ஜெ.சற்குருநாதன் உட்பட பலர் உரையாற்றுவர். புரட்சிகரப் பாடல்கள் உள்ளிட்ட கலைநிகழ்ச்ச்சிகளும் இடம்பெறும்.

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா குமரேசு

சாவகச்சேரி வடக்கு, மடத்தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா குமரேசு அவர்கள் நேற்று (19.07.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா- மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிவகுருவின் சகோதரரும் இராஜரத்தினம் (தங்கராசா, சாவகச்சேரி நகரசபை), சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தசாமி (சாவகச்சேரி நகரசபை) சகுந்தலாதேவி ஆகியோரின் மாமனும், கலாகரன்(அமெரிக்கா), காயத்திரி, காஞ்சனா, கஜீபன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நிலாணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தற்பரன்(கொழும்பு), தர்ஷினி, தர்ஷிகா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு பேரனும், சாந்தநாயகி, இராசநாயகி, செல்வநாயகி, வேதநாயகி, காலஞ்சென்ற தெய்வநாயகி மற்றும் சற்குணநாயகி, யசோதரன், குணநாயகி ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2006) வியாழக்கிழமை பெரியரசடி வீதியில் உள்ள அவரது மகனின் (இராஜரத்தினம்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.30 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியரசடி வீதி,*
*சாவகச்சேரி வடக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
*இராஜரத்தினம்(மகன்)*
*கந்தசாமி (மருமகன்)*

## பரமநாதன் சண்முகலிங்கம்

(நில அளவைத் திணைக்களம், வவுனியா)

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட பரமநாதன் சண்முகலிங்கம் (நிலஅளவைப்புல உதவியாளர், வவுனியா) அவர்கள் 18.07.2006 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் பரமநாதன் (வட்டுக்கோட்டை) காலஞ்சென்ற தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், செந்தில்நாதன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இன்பராணி செந்தில்நாதனின் (ஆஸ்திரேலியா) அன்பு மைத்துனரும், செ.கணேசபாலன்(ஆஸ்திரேலியா), செ.சாந்தா(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் வைத்தியநாதன், சு.தர்மலிங்கம் (கொழும்பு), சரஸ்வதி சபாநாதன், சு.யோகநாதன் (வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற சு.கணேசன், சக்திதேவி மகாதேவன் (வட்டுக்கோட்டை), சு.பரமசிவம் (ஆஸ்திரேலியா), மகேஸ் வரி இராசரத்தினம் (மலேசியா), சவுந்தரநாயகி கந்தசாமி (வட்டுக்கோட்டை), மனோன்மணி கதிரவேற்பிள்ளை (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வவுனியா பூங்காவீதியிலுள்ள நிலஅளவைத்திணைக்கள வளாகத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஆஸ்திரேலியா*
*(தற்சமயம் வவுனியா)*

தகவல்:
*செந்தில்நாதன் (சகோதரன்)*

நீங்கள் ஒரு வெற்றியாளரா என்பதை பாருங்கள் !

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு இல. | 797 |
| திகதி | 18.07.2006 |
| டிக்கட்டின் வர்ணம் | நீலம் |
| செல்லுபடியாகும் தொடர் இல. | 4394335-4409463 |

உத்தியோகபூர்வ முடிவுகள் வெற்றி இலக்கங்கள்

01 18 36 51

ஜக்பொட் பரிசு
Rs.1,730,100/-
வெல்லப்படவில்லை

லக்னம்  கும்பம்

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 334786 | ரூ. 10/- | ரூ. 3,347,860/- |
| 2 இலக்கங்கள் | 30664 | ரூ. 20/- | ரூ. 613,280/- |
| 1 இல.+லக்னம் | 30470 | ரூ. 30/- | ரூ. 914,100/- |
| 2 இல.+லக்னம் | 2835 | ரூ. 100/- | ரூ. 283,500/- |
| 3 இலக்கங்கள் | 816 | ரூ. 500/- | ரூ. 408,000/- |
| 3 இல.+லக்னம் | 70 | ரூ. 5,000/- | ரூ. 350,000/- |
| 4 இலக்கங்கள் | 05 | ரூ. 100,000/- | ரூ. 500,000/- |
| 4 இல.+லக்னம் | 0 | ரூ. 1,000,000/- | ரூ. - |
| மொத்தம் | | | ரூ. 6,416,740/- |
| முச்சக்கர வண்டிகளின் வெற்றி | 5 | ரூ. 204,700/- | ரூ. 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 399651 | | ரூ. 7,440,240/- |

இந்த வெள்ளிக்கிழமை ஜக்பொட் பரிசு
ரூ. 2,477,750/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றிபெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| களுத்துறை | 4394760-4-79 |
| நுவரெலியா | 4396843-3-07 |
| மட்டக்களப்பு | 4399269-1-25 |
| மாத்தளை | 4401911-5-69 |
| காலி | 4399222-3-72 |

தொடர் இல. 5290435 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2006 ஜூலை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மாக்கஸ் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
ரிச்சட், மதுமிதா, நாசர் நடித்த
நாளை
சண்டைகள் நிறைந்த சித்திரம்
காட்சி நேரம் : 10.30, 2.30
(சி-49188)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி
## நாகரத்தினம் (மணி) நடராசா



புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை ராஜசிங்க வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நடராசா 17.07.2006 திங்கட்கிழமை காலை காலமானார்.

அன்னார் நடராஜாவின் அன்பு மனைவியும் விஷ்ணுகுமார் (கண்ணன்-லண்டன்), காலஞ்சென்ற விஷ்ணுமூர்த்தி மற்றும் விஷ்ணுராஜா (பவான்-லண்டன்), விஷ்ணுகாந்தன்(லண்டன்), விஷ்ணுவைதேகி (ரோஜா - லண்டன்), விஷ்ணுவானதி (மல்லிகா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் ஜனனி, தேவகி, சுபாஜினி, இராமகிருஷ்ணன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் துகிலா, அரன், துலினா, வைஷ்ணவி, பைரவி, பிரணவி, விதுஷா, விகாஷ், கீர்த்தனா, சஹானா, மாதேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2006) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
*T.சங்கர்*
*விஷ்ணு பாட்ஸ்,*
*ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே : 222 3907*

*இல.29, ராஜசிங்க வீதி,*
*வெள்ளவத்தை, கொழும்பு - 06*
*தொ.பே : 2360541*

(சி-50304)

## சடையர் சுப்பிரமணியம்

மருதங்கேணி தெற்கு, தாளையடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், பருத்தித்துறை, புலோலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சடையர் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (19.07.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சடையர்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், பூரணத்தின் அன்புக் கணவரும், சின்னத்தம்பி, பாலசுந்தரம், பாலரதி, சாந்தநாயகி, பாலரஞ்சன், ஸ்ரீரங்கன், ஸ்ரீசங்கர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அம்பிகாவதி, அருள்மலர், அருளானந்தம், சீராளகந்தபாலன், சறோஜினி, லக்ஷாயினி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனும், அனட்தர்ஷினி, றொகான், றஜீவ்பார்த்தீபன், கௌசலா, தேவகி, பௌட்அனுஷியா, தமயந்தி, சங்கீதா, சாரங்கன், கபில்பிரதீபன், சயந்தன், பிரிந்தா, மாதங்கன், சாருஜன், சரண்யா, சுங்கவி ஆகியோரின் அன்பு பேரனும், பொன்னம்மா, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வேலுப்பிள்ளை, செல்லம்மா, வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லையா,அருட்பிரகாசம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2006) வியாழக்கிழமை பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உல்லக்கலட்டி,*
*புலோலி மேற்கு,*
*பருத்தித்துறை.*

தகவல்:
*மு.சீராளகந்தபாலன்*
*(மருமகன்)*
*தொ.பே: 0776182031*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லம்மா கணேசலிங்கம்



சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் திருவள்ளுவர் லேன், அரசடி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கணேசலிங்கம் அவர்கள் (18.07.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, சத்திவேலானந்தன் (உரிமையாளர், மாலன் களஞ்சியம் யாழ்ப்பாணம்), சதானந்தன்( உரிமையளர் மாலன் களஞ்சியம் யாழ்ப்பாணம்), கனேஸ்வரி (ஆசிரியை, யாழ்.கனகரத்தினம் ம.ம.வி) ஆகியோரின் அன்புத்தாயும், சிவசுப்பிரமணியம், சிவலோகநாதன், குணபூஷணி, அனுசா, தனமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

*திருவள்ளுவர் லேன்,*
*அரசடி வீதி,*
*கந்தர்மடம்.*

(52407)

தகவல்:
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள்.*

## திருமதி முருகேசு லீலாவதி

காரைநகர், கருங்காலியைப் பிறப்பிடமாகவும், காரைநகர் வியாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு லீலாவதி அவர்கள் நேற்று (19.07.2006) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லதம்பி-இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் கணபதி கந்தையா-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும்.காலஞ்சென்ற சுப்பிரமணியம், ஆறுமுகம், சோமசுந்தரம், செல்லமுத்து நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாதசுந்தரம், [illegible]க்சுந்தரம், ஞானசுந்தரம், கிருஸ்ணசுந்தரம், பாலசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயும் சிவபாக்கியலட்சுமி, புஸ்பராணி, சிவகலை, தேவகுமாரி, யோகேஸ்வரி, ஆகியோரின் மாமியும் சரஸ்வதி, அன்னலெட்சுமி, கமலாம்பிகை, சோதியம்பாள் ஆகியோரின் மைத்துனியும் அரிகரன், கஜேந்தினி, அச்சுதன், சிவரூபி, சிவரூபன், யோகசீலன், சிவகாந்தன், உதர்சன், பிரியங்கா, கணபதிகேசன், சாரங்கா, பானுஜா, பாலேந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (23.07.2006) ஞாயிற்றுக்கிழமை [illegible] 9மணிக்கு கொழும்பு பொரளை ஜெயரட்ண மலச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கனத்தை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வியாவில்,*
*காரைநகர்.*

(52408)

தகவல்:
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

## சரவணமுத்து சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

கரணவாய் தெற்கு, சோளங்கையைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (19.07.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் கந்தையா, அமரர் பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும் கந்தையாபிள்ளையின் மைத்துனரும், பொன்னம்பலதாஸ், கணேசதாஸ், கிருஷ்ணதாஸ், தேவராணி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2006) வியாழக்கிழமை ஆவரங்காலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2மணிக்கு தகனக் கிரியைக்காக ஆவரங்கால் கரதடி மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்.*

(சி-50308)

தகவல்:
*மனைவி (ராசு)*

### திருமதி
## சின்னாச்சிப்பிள்ளை அருணகிரிநாதன்

காரைநகர், சடையாளியை பிறப்பிடமாகவும் இல39,பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாக கொண்ட திருமதி சின்னாச்சிப்பிள்ளை அருணகிரிநாதன் அவர்கள் நேற்று (19.07.2006) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார்அருணகிரிநாதனின் அன்பு மனைவியும், அம்பலவாணர் -சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும், வேலுப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் சிவசுப்பிரமணியம், சிவபாக்கியம், சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற புனிதவதி காலஞ்சென்ற பரமேஸ்வரசர்மா மற்றும் கலைமகள் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை(முள்ளியவளை), மற்றும் சுப்பிரமணியம் (கனடா), காசிப்பிள்ளை (முள்ளியவளை), கணபதிப்பிள்ளை (காரைநகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சண்முக நாதனின் மைத்துனியும் தங்கம்மாவின் சகலியும், திருச்செந்தூர் நாதனின் (செந்தில்) பெரியதாயும், சிவசொரூபி, தார்மீகன், சிவதர்ஷினி, ரோகிணி, சிவகணேசன், பாலகணேசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2006) வியாழக்கிழமை பிப 1 மணியளவில் அவரது சடையாளி, காரைநகர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சடையாளி,*
*காரைநகர்.*

(52410)

தகவல்:
*அருணகிரிநாதன்*
*(கணவர்)*

# ஒற்றையாட்சி என்ற குண்டுச் சட்டிக்குள் பேரினவாதிகள் விரும்பியபடி குதிரையோட்ட புலிகள் இயக்கம் உடன்படாது!

## 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை கருத்து

கொழும்பு, ஜூலை 20

ஒற்றையாட்சி என்ற குண்டுச் சட்டிக்குள் சிங்களப் பேரினவாதிகள் விரும்பியபடி குதிரையோட்ட புலிகள் இயக்கம் என்றைக்கும் உடன்படமாட்டாது.

உண்மையில் மஹிந்த அரசு அமைதி வழியில் அரசியல் தீர்வுகாண விரும்பினால் போர்நிறுத்த உடன்பாட்டிற்குப் புத்துயிர் அளித்து - இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக்கொண்டு - அரசியற்பேச்சுக்கு முன்வர வேண்டும்.

- இவ்வாறு புலிகளின் அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கிறது அவர்களது அதிகாரபூர்வ பத்திரிகையான 'புலிகளின் குரல்'

நேற்று வெளியாகிய 'புலிகளின் குரல்' பத்திரிகையின் 'ஆனி - ஆடி' இதழில் பிரதான தலைப்புச் செய்தியில் புலிகளின் அரசியல் நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

அமைதி வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணல் என்ற அரசியல் நடைமுறையில் உச்சக்கட்டமாக சர்வதேச மயப்பட்ட பேச்சுவாயிலாகத் தமிழரின் விடுதலைப் போராட்டம், இப்போது சர்வதேச அரசியலாகிவிட்டது. இந்தச் சர்வதேச அரசியல் களத்தில் 'இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி என்பது சர்வதேசச் சட்டங்கள், நியமங்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையிலேயே அணுகப்படவேண்டிய நிலையும்' எழுந்துள்ளது. இது சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு ஏற்புடைய விடயமாக இருக்கவில்லை.

எனவேதான், சர்வதேச மயப்பட்டுவிட்ட தமிழரின் போராட்ட அரசியலை மீண்டும் உள்நாட்டுப் பிரச்சினையாகத் தரம் இறக்கி - அனைத்துக் கட்சி மாநாட்டின் தீர்மானம் என்று கூறி அரைகுறைத் தீர்வொன்றைத் திணித்து - அதை விடுதலைப் புலிகள் நிராகரிக்கும்போது அதைச் சாட்டாகவைத்து - தமிழ் மக்கள்மீது இராணுவத் தீர்வொன்றைத் திணிக்கும் நோக்குடன் மஹிந்த அரசு காய்களை நகர்த்துகின்றது.

இந்த அனைத்துக் கட்சி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்தரின் கருத்துக்கள் தமிழரின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவரது அரசு எங்கே நிற்கின்றது என்பதைத் தெளிவாக்கியுள்ளன.

ஒற்றையாட்சிக்குள் - சிங்கள மக்களின் சம்மதத்துடன் - உள்ளகத் தீர்வொன்று எட்டப்படவேண்டும் என்பதே மஹிந்தரது உரை வெளிப்படுத்தும் சாராம்சங்களாகும்.

அவரின் உரையில் தமிழரின் அரசியல் அபிலாஷைகள் கருத்தில் எடுக்கப்படவேயில்லை. அவர் கூட்டிய அனைத்துக்கட்சி மாநாட்டில் தமிழரின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மொத்தத்தில் ஜே.ஆரின் அரசைப் போல - பிரேமதாஸாவின் அரசைப் போல - சந்திரிகாவின் அரசைப் போல மஹிந்தர் அரசும் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாகக் கடுமையான பேரினவாத நிலைப்பாட்டையே எடுத்துள்ளது.

புலிகள் இயக்கம் பேச்சுமேசைக்கு வரமறுக்கின்றது! புலிகள் இல்லாமலே அரசியல்தீர்வு காணப்படும்! புலிகள் வேறு மக்கள் வேறு என்று புளித்துப்போன பழைய பல்லவிகளையே மஹிந்தரும் தனது உரையில் ஒப்புவிக்க முனைந்துள்ளார்.

கடந்த 30 வருடகால ஆயுதப் போராட்ட அரசியலில் சிங்கள அரசுடன் ஐந்து தடவைகள் புலிகள் இயக்கம் நேரடியாகப் பேசியுள்ளது. இந்த ஐந்து பேச்சு முயற்சிகளும் சிங்கள ஆட்சியாளர்களின் கடும்போக்கு நிலைப்பாடுகளாலும் - இராணுவத் திமிர்த்தனங்களினாலும் தோல்விகளையே சந்தித்துள்ளன.

நோர்வே அனுசரணையுடன் நடந்த பிந்திய சமாதான முயற்சியின்போது இருதரப்பிற்குமிடையே ஒரு போர்நிறுத்த உடன்பாடு காணப்பட்டு - அதன் அடிப்படையில் சில இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டிருந்தன. ஆனால், இவற்றிற்கு மதிப்பளித்து - நடைமுறைப்படுத்தி- சமாதான முயற்சிக்கு உரமூட்ட சிங்கள அரசு தவறியதால் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை என்று புலிகள் இயக்கம் நிலைப்பாடெடுத்திருந்தது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும்படியும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து பேச்சு முயற்சிக்குப் புத்துயிர் ஊட்டும் படியும் மஹிந்த அரசைப் பல தடவைகள் புலிகள் இயக்கம் கேட்டிருந்தது. ஆனால், ஒட்டுக்குழுக்களது கொலைச் செயல்களை உற்சாகப்படுத்தியும் - ஆள ஊடுருவும் படைகளைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுப்பி புலிகளையும், மக்களையும் படுகொலை செய்ய அனுமதித்தும் - தமிழர் தாயகத்தில் இராணுவ அட்டூழியங்களை அதிகப்படுத்தியும் அமைதிச் சூழலை மஹிந்த அரசே போட்டுடைத் துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புலிகளுடன் நேரடியாகப் பேசியே காணப்படமுடியும் என்பதே சர்வதேச நாடுகளின் நிலைப்பாடுமாகும். புலிகளைப் புறந்தள்ளிவிட்டு எந்தவோர் அரசியல் தீர்வையும் மஹிந்த அரசால் காணமுடியாது. இத்தகைய குருட்டுத்தனமான முயற்சிகளை முன்னர் சந்திரிகா அம்மையாரும் மேற்கொண்டு படுதோல்வி கண்டதுடன் - இனப்பிரச்சினையை மென் மேலும் சிக்கலாக்கியுள்ளார் என்ற உண்மையையும் மஹிந்த ராஜபக்ஷ உணர வேண்டும்.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற மஹிந்தரின் சிந்தனை வெறும் கற்பனைக்கதையாகும். தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வை வழங்குவதென்று தமிழர் தரப்பை ஒதுக்கிவிட்டு, சிங்களக் கட்சிகள் மட்டுமே ஒன்றுகூடித் தீர்மானிப்பது என்பதும் ஒரு கேலிக்கூத்தான செயலாகும்.

ஒற்றையாட்சி என்ற குண்டுச் சட்டிக்குள் சிங்களப் பேரினவாதிகள் விரும்பியபடி குதிரையோட்ட, புலிகள் இயக்கம் என்றைக்கும் உடன்படமாட்டாது.

சமாதானம் - மனிதாபிமானம் - விழுமியங்கள் என்று சந்திரிகா அம்மையாரைப் போல மஹிந்தரும் முதலைக் கண்ணீர் வடித்து உரையாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

தமிழரின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் அரசியல் தீர்வு காணவேண்டும் என்று மஹிந்த அரசு உண்மையாகவே விரும்பினால் ஏற்கனவேயுள்ள போர் நிறுத்த உடன்பாட்டிற்கு அவரது அரசு புத்துயிர் அளிக்க முன்வரவேண்டும். அதன்பின்னர், புலிகள் இயக்கம், சிங்கள அரசிடம் சமர்ப்பித்துள்ள இடைக் காலத் தன்னாட்சி அதிகா ரசபையை அடிப்படையாகக் கொண்டு அரசியற் பேச்சுக்கு முன்வரவேண்டும். அவ்விதம் மஹிந்தரின் அரசு முன்வந்தால் அவர்களுடன் பேச புலிகள் இயக்கம் தயாராகவுள்ளது.

புலிகளின் இந்த அரசியல் நிலைப்பாட்டை ஏற்க மறுத்து தம் வழி செல்ல மஹிந்த அரசு முயற்சித்தால் புலிகள் இயக்கமும் தனி வழி சென்று தமிழரின் அரசியல் விடுதலையை வென்றெடுக்கப்பாடுபடும். இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## உடுவிலில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிகளும் வெடித்து சில படையினர் காயமடைந்தனர் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

இதில் கப்டன் செனவிரத்தின, லெப்டினன்ட் குமார, லான்ஸ் கோப்ரல் திலகரத்தின ஆகிய படையினர் உயிரிழந்தனர். படுகாயமடைந்த படையினர் அனைவரும் உடனடியாக பலாலிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும்-

அவர்களில் மூன்று பேர் அங்கு உயிரிழக்க, ஆபத்தான நிலையில் இருந்த மூவர் அவசர சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் - என்றும் கூறப்பட்டது.

சம்பவத்தை அடுத்து படையினர் அப்பகுதியில் சுமார் பதினைந்து நிமிட நேரம் தொடர்ச்சியாக மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் மூவர் காயமடைந்தனர். உடுவிலைச் சேர்ந்தவர்களான கு.துரைராஜா (வயது 65), வி.கஜந்தன் (வயது 21), வீமன்காமம் தெல்லிப்பளையைச் சேர்ந்த சபாரத்தினநாயகம் (வயது 68) ஆகியோரே இதில் காயமடைந்தவர்கள் ஆவர். இவர்கள் மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் விசாரணைகளை நடத்தினார்.பின்னர் பலாலி சென்று சடலங்களையும் அவர் பார்வையிட்டார்.

(எ-1-15-86-190-ரி)

## காணாமற்போனோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

இந்நிலைப்பாட்டை எந்த ஒரு சட்டத்தின் கீழும் தார்மீக ரீதியாவும் நியாப்படுத்தவே முடியாது. ஸ்ரீலங்கா ஒப்புக்கொண்ட மக்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கும் இது எதிரானது. தற்போதைய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அரசமைப்பின் கீழ் நியமிக்கப்பட்டனரா என்ற சர்ச்சை நிலவும் நிலையில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்றும் ஆசிய மனித உரிமைகள் ஆணைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ- ஐ)

## மோ.சைக்கிளில்...

(முதலாம் புக்கத் தொடர்ச்சி)

போது அந்த வழியால் மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் இந்த இளைஞர்கள் மீது வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு ஓடித் தப்பி விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த இளைஞர்கள் மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(எ-1-78)

## ஐரோப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டிருப்பது தெரிந்ததே. இதனால் கண்காணப்புக்குழுவின் பணிகளைத் தொடர்வதில் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பெரும் ஆபத்தைச் சந்தித்துள்ள போர் நிறுத்த உடன்படிக்கை முறிந்துவிடாது அமைதியை உயிர்ப்புடன் வைத்திருக்கும் நோக்கில் அரசு மற்றும் விடுதலைப்புலிகள் ஆகிய தரப்பினர் சந்திப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம் அதன் விசேட பிரதிநிதி அன்ட்ரஸ் ஒஜேலன்டை கொழும்புக்கு அனுப்பியுள்ளது.

கடந்த திங்களன்று கொழும்புக்கு வருகை தந்த அவர் நேற்று அரச பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்குச் செல்லவிருக்கும் அவர் அங்கு புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவார். (ஐ)

## நிதிச் சட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்க அனுமதிக்க முடியாது என ஜனாதி பதி கருதுகின்றார்.

''எனவே, ஏற்கனவே நிறைவேற்ற முடியாமல் போன நான்கு நிதிச் சட்டங்களையும் அப்படியே மீண்டும் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க ஜனாதிபதி தீர்மானித்திருக்கின்றார்.

''இந்தச் சட்டமூலங்கள் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டால் அரசைக் கலைத்துத் தேர்தலை நடத்த ஜனாதிபதி தயாராக இருக்கின்றார். அரசின் நிதிச் சட்ட மூலம் ஒன்று சபையில் தோற்கடிக்கப்பட்டால் அரசு பதவி விலகுவதுதான் முறை. அதை ஜனாதிபதி பின்பற்றுவார். தமது அரசைக் கலைத்துத் தேர்தலுக்கு உத்தரவிடுவார்.

''தேர்தலை எதிர்நோக்கத் தயாரானவர்கள் நாடாளுமன்றத்தில் நிதிச் சட்ட மூலத்தைத் தோற்கடித்து நாடாளுமன்றக் கலைப்புக்கு வழி செய்யட்டும்.

''முன்னைய ஜனாதிபதி சந்திரிகா போல விடயத்தை இழுபட விட்டுச் சிக்கலாக்கத் தற்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷ விரும்பவில்லை. 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' இவ்விவகாரத்தில் ஒரு முடிவு எட்டப்பட வேண்டும் என ஜனாதிபதி கருதுகின்றார்'' - இப்படி ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-க)

## வடக்கு - கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இந்த நிலைமை காரணமாக இந்தியத் தமிழ் மக்கள் வீறுகொண்டு எழுந்து எமது மக்களுக்கு உதவி வழங்கத் தொடங்கி விட்டனர். சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதனால்தான் இந்த நிலைமை தோன்றியது.

''எம்மீது அரசு யுத்தத்தைப் பலவந்தமாகத் திணித்தால் நாம் அதை எதிர்கொள்வோம். அதை முறியடித்து வெற்றி கொள்வோம்.

''தமிழீழம் உருவாகுவதற்கு, ஜே.வி.பியினரும், ஜாதிக ஹெல உறுமயவினரும் எமக்கு வாய்ப்பை ஏற்படுத்தித்தரப்போகின்றனர்.

வடக்கு - கிழக்கைப் பிரிக்க வேண்டும் என ஜே.வி.பி. நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அந்த வழக்கின்படி வடக்கு - கிழக்குப் பிரிக்கப்பட்டால் யுத்தத்தைத் தொடங்கும் பிரகடனமாகவே அதை நாம் ஏற்றுக்கொள்வோம்.

''ஒரு வகையான யுத்தத்தை முன்னெடுத்து வடக்கையும், கிழக்கையும் பிரித்து விடவே அரசு முயலுகிறது. அது ஒருபோதும் நடவாது. அதற்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம்.

''சமாதானத்தின் மீது பற்றுள்ளவர் போல் ஜனாதிபதி காட்டிக் கொண்டு மறுபுறம் தமிழ் மக்கள் மீது வன்முறைகளை ஏவி விட்டுள்ளார்.

''ஜனாதிபதி நாடகமாடுகிறார். சர்வதேசத்தையும், இந்நாட்டு மக்களையும் அவர் ஏமாற்றுகிறார். அவர் சிறந்த நடிகராக இருக்கிறார். இந்த வருடத்தின் சிறந்த நடிகருக்கான விருது ஜனாதிபதிக்கே வழங்கப்பட வேண்டும்.

''இடைவிடாது தமிழ் மக்களைக் கொல்வதையும், எம்மீது யுத்தத்தைத் திணிப்பதையும் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். அதனையும் மீறி எம் மீது யுத்தத்தைத் திணித்தால் அதனை வெற்றிகரமாக முறியடிப்போம்.'' - இப்படி சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ஐ)

இன் கணனிப் பயிற்சி நெறிகள்
பிரிவு V ஆரம்பம் 23,25.07.2006
Special Offer 2000/-
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க,
A/L மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MS OFFICE 2003 | 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 6 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 Months |

Softview Computer College
Head Office :- 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
Branch :- 55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

8 வருட சேவை
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
O/L DAY CLASS
இறுதிப்பிரிவு: 21.07.2006
ஆரம்பம்: 8.30 - 2.30
தரம் - 6,7,8,9,10
O/L EVENING CLASS 3.15 - 6.00
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
PAPER CLASS
MATHS - C.K.B.தயாவன்
Tues, fri. - 5 - 6 part I
Sat., Sun. - 12 - 1 part II
SCIENCE - N.தேவா
Mon., Thur. - 5 - 6 p.m.
(வினா விடை வெளியீடுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

System Engineer
Micorsoft அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
மேலதிக விபரங்களுக்கு உடனடியாக தொடர்புகொள்க
MCS 324, Palaly Road, Jaffna.
MCP MCSE MCSA

புவியியல்
K.சிவகாந் B.A (Hons) Geo.Sp
2008- 2.30 - 3.30
2007 - மானிடப் புவியியல்
குடித்தொகை 3.30 - 5
2007 PaPer class
சனி, ஞாயிறு மட்டும்
ஆரம்பம்: 22.07.2006
திகழ் கல்வி நிலையம்
கே.கே.எஸ் வீதி இணுவில்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.